E Paper

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஜுலை 16 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

தினகரன் மின்னிதழ்

வருட. 90 இல. 166

Saturday 16, July, 2022

11 பக்கங்கள்

## A/L பரீட்சை பெறுபேறுகள் அடுத்த மாத நடுப்பகுதியில்

### பரீட்சை திணைக்களம் எதிர்பார்ப்பு

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்த மாதம் நடுப்பகுதியில் வெளியிடப்படுமென எதிர்பார்க்கப்படுவதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள பல்வேறு நெருக்கடிகள் காரணமாக உயர்தரப் பரீட்சை

06

# அரசியலமைப்பை மீறும் எந்தவொரு நடவடிக்கைக்கும் ஒருபோதும் இடமில்லை

### பதில் ஜனாதிபதியாக பதவியேற்றபின் ரணில் விக்கிரமசிங்க உரை

**சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்**

**நாட்டில் சட்டத்தையும் அமைதியையும் சீர்குலைக்க இடமளிக்க முடியாது**

**'அதிமேதகு' தடை, 'ஜனாதிபதி கொடி' நீக்கம்**

*லோரன்ஸ் செல்வநாயகம்*

அரசியலமைப்பை மீறும் எந்தவொரு நடவடிக்கைக்கும் இடமளிக்கப் போவதில்லையென பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (15) வலியுறுத்தினார்.

பதில் ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு விசேட அறிக்கையொன்றை அவர் விடுத்தார்.

அரசியலமைப்பை பாதுகாத்து நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் நாட்டின் முன்னேற்றத்துக்காக அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமெனவும் பதில் ஜனாதிபதி தெரிவித்தார்.

19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தேவையான பின்னணி மிக குறுகிய காலத்தில் தயாரிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் ஊடகங்களுக்கு விசேட அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

'நான் எப்போதும் ஜனநாயக ரீதியாக செயல்படுவதுடன் அரசியலமைப்புக்கிணங்கவே செயற்படுவேன். அத்துடன் அரசியலமைப்பை மீறி ஒருபோதும் செயல்பட இடமளிக்கப்போவதில்லையென்றும் பதில் ஜனாதிபதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று தெரிவித்தார்.

அத்துடன் ஜனாதிபதியை 'அதிமேதகு' என விளிப்பதை உத்தியோகபூர்வமாக தடை செய்வதாகவும் ஜனாதிபதி கொடியை இரத்துச் செய்யப் போவதாகவும் நேற்று அதிரடி அறிவிப்பொன்றையும் விடுத்துள்ளார்.

நாட்டில் சட்டத்தையும் அமைதியையும் சீர்குலைக்க இடமளிக்க முடியாது. அவ்வாறு இடம்பெற்றால் நாட்டு மக்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரும். அது அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக் கொடுப்பதற்கும் பெரும் பாதிப்பாக அமையுமென்றும் பதில் ஜனாதிபதி நேற்று தெரிவித்தார். பதில் ஜனாதிபதி தமதுரையில் மேலும் தெரிவிக்கையில்:

06



கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்ததையடுத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க , நாட்டின் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் அவர் நேற்று உத்தியோகபூர்வமாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட போது..

## அனைத்து பாடசாலைகளுக்கும் எதிர்வரும் 20 வரை விடுமுறை

### கல்வி அமைச்சு நேற்று அறிவிப்பு

*லோரன்ஸ் செல்வநாயகம்*

அரசாங்க மற்றும் அரச அனுசரணையுடன் இயங்கும் தனியார் பாடசாலைகள் அனைத்துக்கும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விடுமுறை வழங்க தீர்மானித்துள்ளதாக கல்வியமைச்சு நேற்று தெரிவித்தது.

ஏற்கனவே எதிர்வரும் 18 ஆம் திகதி வரை அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த விடுமுறையைத் தொடர்ந்து எதிர்வரும் 20ஆம் திகதி வரை நீடிப்பதற்கு தீர்மானித்துள்ளதாகவும் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி மீண்டும் அனைத்து பாடசாலைகளும் கல்வி நடவடிக்கைகளுக்காக

06

## புதன்கிழமை புதிய ஜனாதிபதி தெரிவு; இன்று விசேட பாராளுமன்ற அமர்வு

ஜனாதிபதி பதவிக்கான வெற்றிடம் ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் வாக்கெடுப்பினை எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை நடத்த கட்சி தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



அரசியலமைப்பு மற்றும் 1981ஆம் 2ஆவது இலக்கத்திற்கமைய ஜனாதிபதி தெரிவு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆவது உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றம் இன்று (16) காலை 10 மணிக்கு கூடவுள்ளது.

1981 ஆம் 2ஆவது இலக்க ஜனாதிபதி தெரிவு

06

## புதிய ஜனாதிபதி தெரிவு செயன்முறையை சற்றும் தாமதிக்க வேண்டாம்

### சட்டத்தரணிகள் சங்கம் வேண்டுகோள்

புதிய ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் செயன்முறையை சற்றும் தாமதிக்க வேண்டாமென அனைத்து அரசியல் கட்சித்தலைவர்களிடமும் சட்டத்தரணிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது,

அத்துடன் இலங்கையின் வரலாற்றில் முதன்முறையாக இடம்பெறவிருக்கும் முக்கியமான அதிகாரப் பரிமாற்றத்தைப் பாதிக்கும் எந்தவொரு செயற்பாட்டிலும் ஈடுபடவேண்டாமென பொது மக்களிடம் சட்டத்தரணிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ்,

06

## ஜனாதிபதி கோட்டாபயவின் இராஜினாமாவை உத்தியோகபூர்வமாக அறிவித்தார் சபாநாயகர்

### இன்னும் 07 தினங்களில் புதிய ஜனாதிபதி தெரிவுக்கு ஏற்பாடு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியை நேற்று முன்தினம் 14 ஆம் திகதி முதல் இராஜினாமா செய்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

06



## சீனாவிடம் இருந்து 04 பில். அமெரிக்க டொலர் கடன்



### பேச்சுவார்த்தை நடைபெறுவதாக தெரிவிப்பு

நான்கு பில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுக்கொள்ள சீனாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக சீனாவுக்கான இலங்கை தூதுவர் பாலித கொஹொன தெரிவித்துள்ளார்.

இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். நான்கு பில்லியன் அமெரிக்க டொலர் கடனானது மிக விரைவில் கிடைக்கப்பெறும் எனதாம் நம்புவதாகவும் பாலித கொஹொன குறிப்பிட்டுள்ளார்.

சீனாவிடமிருந்து

06

## கோட்டாபய ராஜபக்ஷ வெளியேறியதில் இந்தியாவுக்கு எந்த பங்கும் இல்லை

### இந்திய வெளியுறவு பேச்சாளர் அரிந்தம் பாக்சி வலியுறுத்து



கோட்டாபய ராஜபக்சவின் தலைமைக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்த பின்னர் நாட்டிலிருந்து அவர் வெளியேறியதில் இந்தியாவுக்கு எந்தப் பங்கும் இல்லை என இந்திய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் அரிந்தம் பாக்சி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

புதுடில்லியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் தெரிவிக்கையில், இலங்கை மக்கள், ஜனநாயக வழிமுறைகள் மற்றும் அரசியலமைப்பு மூலம் முன்னேற்றத்திற்கான

06

### பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள்:

## மஹிந்த - பசில் வெளிநாடு செல்ல 28ஆம் திகதிவரை நீதிமன்றம் தடை

முன்னாள் நிதியமைச்சர்களான மகிந்த ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோர் நீதிமன்ற அனுமதியின்றி வெளிநாடு செல்வதற்கு உயர் நீதிமன்றம் இடைக்கால தடை

06

**மனுவொன்று தொடர்பில் உயர்நீதிமன்றம் உத்தரவு**



### பாராளுமன்றம் இன்று கூடுகிறது:

## ஜனாதிபதி வெற்றிடம் குறித்து பாராளுமன்றில் அறிவிக்கப்படும்

**19இல் வேட்புமனு தாக்கல்; 20இல் வாக்கெடுப்பு**

அரசியலமைப்பு மற்றும் 1981ஆம் ஆண்டு 02ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆவது சரத்துக்கமைய பாராளுமன்றம் இன்று (16) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்குக் கூடவிருப்பதாக பாராளுமன்ற


06





**ஸ்திரமான அரசு அமையாவிடின் முழுநாடும் முடக்கப்படும் ஆபத்து**

மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் எச்சரிக்கை 03



**கொரோனா தொற்று மீண்டும் திடீர் அதிகரிப்பு**

ஒருவர் பலி; 393 பேர் ஆஸ்பத்திரியில் 03



யுத்தத்தை வெற்றிகொண்டவர் எனும் ரீதியில்

**முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய நாட்டுக்கு ஆற்றிய சேவை உயரியது** 03

## ஜனநாயக முறையில் தீர்வு காணுங்கள்

### டுவிட்டரில் பிரித்தானிய உயர்ஸ்தானிகர்

இலங்கையில் நிலவும் அரசியல் நெருக்கடிக்கு அரசியலமைப்பின் பிரகாரம் ஜனநாயக முறையில் மக்களின் அபிலாஷைகளை பாதுகாக்குமாறு இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் கேட்டுக் கொண்டுள்ளார்.



டுவிட்டர் பதிவொன்றை வெளியிட்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின்

06

## ரஷ்ய விமான வழக்கு நேற்று தள்ளுபடியானது

### கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் உத்தரவு

ரஷ்யாவின் 'ஏரோஃப்ளோட்' விமானம் தொடர்பான வழக்கை கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் நேற்று (15) தள்ளுபடி செய்துள்ளது.



ரஷ்ய ஏரோஃப்ளோட் விமானத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கோரி, ஏர்போர்ட் அன்ட் ஏர்லைன் கம்பெனி லிமிடெட் கடந்த

06

### பொதுப் பயன்பாட்டு ஆணையத்தின்

## மின்சார கட்டண திருத்த பரிந்துரைகள் வெளியானது



உத்தேச மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பாக 100க்கும் மேற்பட்ட பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு பெற்றுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இந்தக் கட்டணங்களை எவ்வாறு திருத்துவது என்பது

06

## பெற்றோலை வாய்மூலமாக உறிஞ்சி எடுத்தல் ஆபத்தானது

### நுரையீரலுக்கு பெரும் பாதிப்பென எச்சரிக்கை



வாய்மூலமாக உறுஞ்சி, வாகனங்களிலிருந்து பெற்றோலை வெளியேற்ற முயற்சிக்கும்போது, நுரையீரலுக்குப் பாதிப்பு ஏற்படக் கூடுமென காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் விசேட வைத்தியர் கபிலானி வித்தானாராச்சி தெரிவித்துள்ளார்.

பதுளை, பொது வைத்தியசாலையின் 30 வயதுடைய வைத்தியர் ஒருவர், நேற்று கராப்பிட்டி போதனா வைத்தியசாலையில் எக்மோ இயந்திர உதவியுடன்

06

# சர்வதேச செய்திகள்

## ஈரானை சமாளிக்க இஸ்ரேலுடன் அமெரிக்கா பாதுகாப்பு ஒப்பந்தம்

அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவை விரிவுபடுத்த கூட்டு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகியுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் இஸ்ரேலின் தற்காலிகப் பிரதமர் யாயர் லிப்பிட்டும் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.



மத்திய கிழக்கின் நிலைத்தன்மையில் பாதிப்பை ஏற்படுத்த ஈரான் எடுக்கும் முயற்சிகளை முறியடிப்பது இந்த ஏற்பாட்டின் இலக்குகளில் ஒன்று. ஈரானை என்றுமே அணுவாயுதங்களை வைத்திருக்காமல் பார்த்துக்கொள்வதற்கான குறிப்பு ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ளதாகவும் பைடன் தரப்பு அதிகாரி ஒருவர் கூறினார்.

பதற்றம் அதிகரித்து வரும் நிலையில் ஈரானைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பைடன் மீது நெருக்குதல் இருந்து வருகிறது. அதைத் தொடர்ந்து தற்காப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது.

மேலும், தேசிய அளவில் தனது ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்தி ஈரான் அணுவாயுதங்கள் வைத்திருப்பதைத் தவிர்க்க அமெரிக்கா தயாராய் இருப்பதாக பைடன் குறிப்பிட்டார்.

இஸ்ரேலுக்குத் தாம் மேற்கொண்ட அதிகாரத்துவப் பயணத்தின் இரண்டாம் நாளான கடந்த வியாழனன்று அவர் லிப்பிட்டுடன் இணைந்து இந்த வாக்குறுதியை அளித்தார்.

ஈரானின் அணுவாயுதத் திட்டத்தை மிகப் பெரிய மிரட்டலாக இஸ்ரேல் கருதுகிறது.

தமது மத்திய கிழக்குப் பயணத்தின் அடுத்த அங்கமாக பைடன் நேற்று சவூதி அரேபியா பயணித்தார்.

அவர், இஸ்ரேலிலிருந்து நேரடியாக சவூதி அரேபியாவுக்கு அதிகாரத்துவப் பயணம் மேற்கொண்ட முதல் அமெரிக்க ஜனாதிபதியாக பதிவானார்.

## பிலிப்பைன்ஸில் புன்னகைக்காத அரச அதிகாரிகளுக்கு அபராதம்



பிலிப்பைன்ஸ் மேயர் அரிஸ்டோட்டில் அகுயர் வித்தியாசமான கொள்கையை அறிமுகம் செய்துள்ளார்.

அரசாங்க ஊழியர்கள் புன்னகைக்க வேண்டும், இல்லை என்றால் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படலாம் என்கிறார் அவர். உள்ளூர் அரசாங்கத்தின் சேவைத்தரத்தை மேம்படுத்துவது அந்தப் 'புன்னகைக் கொள்கையின் நோக்கம் என்று அவர் கூறினார்.

மக்களுக்குச் சேவையாற்றும்போது நேர்மையைப் பிரதிபலிக்கவும் நிதானமான, தோழமையான சூழலை உருவாக்கவும் அந்தக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அகுயர் இம்மாதம் தான் குவேஸான் மாநிலத்தில் உள்ள முலானே என்ற ஊரின் மேயராகப் பொறுப்பேற்றார்.

அரசாங்க ஊழியர்களிடம் உதவி கேட்கும்போது அல்லது வரி செலுத்தச் செல்லும்போது தாங்கள் நடத்தப்படும் விதம் குறித்து உள்ளூர்வாசிகள் புகார் செய்ததாக அவர் கூறினார்.

அதனால் ஊழியர்களின் நடத்தையை மாற்ற விரும்புகிறார் அகுயர்.

புன்னகைக் கொள்கையை மீறும் ஊழியர்களுக்கு அவர்களின் 6 மாதச் சம்பளத்திற்கு ஈடான அபராதம் விதிக்கப்படலாம் அல்லது அவர்கள் வேலையிலிருந்து தற்காலிகமாக நீக்கப்படலாம்.

## கொரோனாப் பரவல் ஐந்தாவது வாரமாக தொடர்ந்து அதிகரிப்பு

உலகம் முழுவதும் கொரோனா தொற்றினால் புதிதாக பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 5ஆவது வாரமாக அதிகரித்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.



இது குறித்து அந்த அமைப்பு கடந்த வியாழக்கிழமை வெளியிட்டுள்ள வாராந்திர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த வாரம் மட்டும் உலகம் முழுவதும் 57 இலட்சம் பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டது. இது, முந்தைய வாரத்தோடு ஒப்பிடுகையில் 6 வீதம் அதிகமாகும். தொடர்ந்து 5ஆவது வாரமாக வாராந்திர கொரோனா பாதிப்பு அதிகரித்து வருகிறது. கொரோனா பாதிப்பால் உயிரிழந்தோர் எண்ணிக்கை சுமார் முந்தைய வாரத்தைப் போலவே உள்ளது.

கடந்த வாரத்தில் அந்த நோயால் பாதிக்கப்பட்டிருந்த 9,800 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக, கொரோனா நெருக்கடியிலிருந்து உலகம் முழுமையாக மீள்வதற்கு இன்னும் காலம் பிடிக்கும் என்றும், அந்த நோய்த்தொற்றை அவசரநிலையாகக் கருத வேண்டிய அவசியம் தற்போதும் உள்ளது என்றும் உலக சுகாதார அமைப்பு கூறியது.

உக்ரைன் மீதான ரஷ்ய போர்:

## உலக பொருளாதாரத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தல்

உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்துள்ள போர் உலகப் பொருளாதாரத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக அமெரிக்க நிதியமைச்சர் ஜேனட் யெல்லன் தெரிவித்துள்ளார்.




இந்தோனேசியாவில் ஜி20 நாடுகளின் நிதியமைச்சர்களும் மத்திய வங்கி ஆளுநர்களும் சந்தித்துப் பேச தயாராகி வரும் நிலையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவலின் பாதிப்பிலிருந்து மீண்டுவர உலகம் போராடிவரும் நிலையில் ரஷ்யாவின் ஊடுருவல் பணவீக்கத்தை அதிகரிக்கச் செய்வதாக யெல்லன் கூறினார்.


உக்ரைனியப் போரால் உலகின் ஒவ்வொரு மூலையிலும் பாதகமான விளைவுகள் நேர்வதாக அவர் குறிப்பிட்டார்.

எரிபொருள் விலை உயர்வு, உணவுப் பாதுகாப்பு மீதான அச்சுறுத்தல் ஆகியவற்றை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தப் போரால் உலகளாவிய வகையில் ஏற்படும் பொருளாதார சீரழிவுக்கும் மனிதாபிமான விளைவுகளுக்கும் சர்வதேச சமூகம் ரஷ்ய ஜனாதிபதி புட்டினைப் பொறுப்பாக்க வேண்டுமென அமெரிக்க நிதியமைச்சர் வலியுறுத்தினார்.

## பிரிட்டிஷ் தூதுவரை வெளியேற மியன்மார் இராணுவம் உத்தரவு

பிரிட்டிஷ் தூதர் இராஜதந்திர நடைமுறைகளை மீறியதால் நாட்டை விட்டு வெளியேறுமாறு அவருக்கு உத்தரவிடப்பட்டதாக மியன்மார் இராணுவம் கூறியுள்ளது.



மியன்மாருக்கான பிரிட்டிஷ் தூதராக பீட் வாவ்ல்ஸ் கடந்த ஆண்டு நியமிக்கப்பட்டார்.

அதைத் தொடர்ந்து தலைமைத்தூதர் இல்லாத வேளையில் தற்காலிகத் துணைத்தூதராக அவர் செயல்படுவார் என்று லண்டன் அறிவித்திருந்தது.

மியன்மாரில் நிலவும் அரசியல் குழப்பத்தின் எதிரொலியாக அந்த நடவடிக்கை அமைந்தது. பிரிட்டிஷ் தூதர் என்ற பொறுப்பை அங்கீகரிக்க மியன்மார் இராணுவம் மறுத்துவிட்டது.

கடந்த பெப்ரவரியில் ஒரு கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக வாவ்ல்ஸ் மியன்மார் புறப்பட்டுச் சென்றார். ஆனால் அங்குள்ள இராணுவம் அவருக்கு அனுமதி மறுத்தது.

வாவ்ல்ஸ் மியன்மார் இராணுவம் நடத்துவதாகச் சொல்லப்படும் அத்துமீறல்கள் குறித்து வெளிப்படையாகக் கருத்துச் சொல்பவர். மியன்மாரில் தம்முடைய பொறுப்பு திடீரென முடிவுக்கு வந்துள்ளது என்று வாவ்ல்ஸ் டுவிட்டரில் குறிப்பிட்டிருந்தார்.

## இந்தியாவில் முதலாவது குரங்கம்மை அடையாளம்

இந்தியாவில் முதல் குரங்கம்மைத் தொற்றுச் சம்பவம் அடையாளம் காணப்பட்டுள்ளது.




ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து இந்தியாவின் கேரள மாநிலத்துக்குத் திரும்பிய 35 வயது ஆடவரிடம் தொற்றுக்கான அறிகுறிகள் தென்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அந்த ஆடவர் மருத்துவமனையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். அவரது உடல்நிலை சீராக உள்ளது என்று மாநிலத்தின் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

ஆடவரின் நெருங்கியவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவருடன் விமானத்தில் பயணம் செய்தவர்கள் தங்களிடம் நோய்க்கான அறிகுறிகள் தென்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

குரங்கம்மைத் தொற்றுச் சம்பவத்தின் தொடர்பில் இந்தியாவின் மத்திய அரசாங்கம் கேரளத்துக்குச் சிறப்புக் குழுவொன்றை உடனடியாக அனுப்பியுள்ளது.

## ரஷ்ய ஏவுகணை தாக்குதலில் உக்ரைனில் 23 பேர் உயிரிழப்பு

உக்ரைனில் போர் முன்னரங்கு பகுதியாக உள்ள கிழக்கில் இருந்து தொலைவில் உள்ள பகுதி மீது ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதல்களில் மூன்று சிறுவர்கள் உட்பட குறைந்தது 23 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.



தலைநகர் கீவில் இருந்து தென்மேற்காக உள்ள வினிட்சியா நகர் மீது கடந்த வியாழனன்று நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் மேலும் 100க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். இது மோதல் இடம்பெற்று வரும் டொன்பாஸில் இருந்து நீண்ட தூரத்தில் உள்ளது.

மூன்று ரஷ்ய ஏவுகணைகள் அலுவலகத் தொகுதி ஒன்றின் மீது தாக்கி இருப்பதோடு குடியிருப்புக் கட்டடங்களும் சேதமடைந்துள்ளன. இது பயங்கரவாதத்தின் வெளிப்படையான செயல் என்று உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

மேலும் அங்கிருந்த 50 கார்கள் எரிந்து நாசமாகின. நகரை நோக்கி வீசப்பட்ட மேலும் 4 ரஷ்ய ஏவுகணைகள் வான்பாதுகாப்பு ஏவுகணைகள் மூலம் இடைமறித்து தாக்கி அழிக்கப்பட்டன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## உலக செல்வந்தர்கள் பட்டியலில் இருந்து விலக பில் கேட்ஸ் உறுதி

உலகச் செல்வந்தர்கள் பட்டியலிலிருந்து விலகப்போவதாகவும் தமது சொத்தை நன்கொடையாகக் கொடுக்கப்போவதாகவும் பெரும் செல்வந்தர்களில் ஒருவரான பில் கேட்ஸ் கூறியுள்ளார்.


20 பில்லியன் டொலர் நன்கொடை அளிக்கப்போவதாக அவர் அறிவித்துள்ளார்.

உலகின் 4ஆவது மிகப்பெரிய செல்வந்தரான அவர் தமது வளங்களை மீண்டும் சமுதாயத்திற்குத் திருப்பிக் கொடுப்பது தமது கடமை என்று தெரிவித்தார்.

2010ஆம் ஆண்டு தமது சொத்தின் பெரும்பகுதியை நன்கொடையாய்க் கொடுக்கப்போவதாக கேட்ஸ் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் அதன் பின்னர் அவரின் சொத்தின் மதிப்பு இரு மடங்காக அதிகரித்து 118 பில்லியன் டொலராய் உள்ளது. எனினும் இம்மாதம் அவர் பில் அன்ட் மெலின்டா கேட்ஸ் அறநிறுவனத்திற்கு நன்கொடை அளித்தபின் அது குறைந்துவிடும் என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும் 2026ஆம் ஆண்டுக்குள் அறநிறுவனம் ஆண்டுக்கு 9 பில்லியன் டொலர் செலவிடும் என்று கேட்ஸ் தமது ட்விட்டர் பக்கத்தில் கூறினார். மற்ற செல்வந்தர்களும் சமூகத்திற்குத் திருப்பிக் கொடுக்க முன்வருவர் என்று அவர் நம்புவதாக பி.பி.சி செய்தி நிறுவனத்திற்கு அவர் தெரிவித்தார்.



## அபேவின் மரணம்: தாய்வான் அஞ்சலி

ஜப்பான் நாட்டின் முன்னாள் பிரதமர் சின்சோ அபே துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி கொல்லப்பட்டுள்ளதை தாய்வான் பேரிழப்பாகக் கருதுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



சின்சோ அபேயின் மறைவையொட்டி, எமது வாழ்நாள் பங்காளருக்கு ஆழ்ந்த அனுதாபங்கள் என்று குறிப்பிட்டுள்ள தாய்வான், அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் தைபேயின் மிக உயரமான கட்டடமாக விளங்கும் 101 என்ற கட்டடத்தையும் ஒளிரச் செய்தது என்று ஏ.என்.ஐ. தெரிவித்துள்ளது.

இந்தோபசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் இராணுவ செல்வாக்கு அதிகரித்து வருவதையும் தாய்வானை உரிமை கோருவதையும் 2020 முதல் அபே விமர்சித்து வந்தார்.

## இத்தாலி பிரதமரின் இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி நிராகரிப்பு

இத்தாலியப் பிரதமர் மரியோ டிராகியின் பதவி விலகலை அந்நாட்டு ஜனாதிபதி செர்கியோ மட்டாரெல்லா நிராகரித்துள்ளார்.



அதிகரிக்கும் விலைகளைச் சமாளிப்பதற்கு டிராகி முன்வைத்த திட்டம் குறித்த நம்பிக்கைத் தீர்மான வாக்கெடுப்பு கடந்த வியாழனன்று நடைபெற்றது. இத்தாலியின் கூட்டணி அரசாங்கத்தில் மிகப்பெரிய கட்சியான 5 ஸ்டார் முவ்மன்ட் அதற்கு எதிராக வாக்களித்தது.

'அரசாங்கத்துக்கு ஆதரவளித்த தேசிய ஐக்கியக் கூட்டணி இனி இல்லை' என்று கூறிய டிராகி தமது பதவி விலகல் கடிதத்தைச் சமர்ப்பித்தார்.

இருப்பினும் முடிவை மறுபரிசீலனை செய்யும்படி ஜனாதிபதி மட்டாரெல்லா வலியுறுத்தினார். தற்போதைய அரசியல் சூழல் குறித்து பாராளுமன்றத்தில் விளக்கம் அளிக்கும்படி அவர் டிராகியிடம் கூறினார்.

பாராளுமன்றக் கூட்டம் வரும் புதன்கிழமை (20 ஜூலை) நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தாலியின் பொருளாதார நிலை மோசமடைந்து வரும் நிலையிலேயே இந்த அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

## இங்கிலாந்து பிரதமர் போட்டியில் ரிஷி சுனக் தொடர்ந்து முன்னிலை

இங்கிலாந்தின் அடுத்த பிரதமரை தேர்ந்தெடுப்பதற்கான பணிகள் மும்முரமாக நடைபெற்று வரும் வேளையில் ஆரம்ப சுற்றுகளில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக் முன்னிலை பெற்றுள்ளார்.



இங்கிலாந்து அரசியலமைப்பு சட்டப்படி, ஆளும் கட்சி தலைவராக தேர்ந்தெடுக்கப்படுபவரே பிரதமராகவும் பதவியேற்பார். அந்த வகையில் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பதவிக்கான தேர்தல் நடைபெற்று வருகிறது.

இதில், இந்திய வம்சாவளிகளான ரிஷி சுனக், சுயெல்லா பிரேவர்மேன், பாகிஸ்தானைப் பூர்விகமாகக் கொண்ட முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் சஜித் ஜாவித் மற்றும் பென் வேலஸ், பென்னி மோர்டான்ட் உட்பட 11 பேர் போட்டியிடுவதாக அறிவித்தனர். இந்நிலையில், ரிஷி சுனக் உட்பட 6 வேட்பாளர்கள் கடந்த வியாழனன்று 2ஆவது சுற்று வாக்குப்பதிவை எதிர்கொண்டனர். இதில் ரிஷி சுனக் 101 வாக்குளை பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

3ஆம் சுற்று வாக்குப்பதிவு அடுத்த வாரம் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய பிரதமராக தேர்ந்தெடுக்கப்படுபவரின் பெயர் வரும் செப்டெம்பர் மாதம் 5ஆம் திகதி அறிவிக்கப்படும்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444, 0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஜுலை 16 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN
தினகரன்



**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.39 |
| லுஹர் | 12.17 |
| அஸர் | 03.44 |
| மஃரிப் | 06.32 |
| இஷா | 07.48 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஆனி 32

ராகுகாலம் : பகல் : 07.30 - 9.00வரை
சுபநேரம் : காலை : 09.00 - 10.30வரை

யோகம்: சித்தஅமிர்த யோகம்

திதி: திரிதியை

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | செலவு |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)





ஸ்ரீ சத்ய சாய் பாபா பகவான், சீரடி சாயி பாபா இருவரையும் வழிபடும், சாயி பக்தர்களுக்கு உரித்தான புனித நன்நாள் " குரு பூர்ணிமா" தினமாகும். இதனை முன்னிட்டு கடந்த பௌர்ணமி 13 ஆம் திகதி புதன்கிழமை கொழும்பு புதுச்செட்டித் தெருவில் அமைந்துள்ள. ஸ்ரீ சீரடி சாயி இராஜகோபுரத்தில், வட இந்திய சீரடி சாயி சமாஜத்தின் ஏற்பாட்டில், பூஜித்து எடுத்துவரப்பெற்ற,சீரடி சாயி "புனிதக்காவி சீரடி கொடி" இராஜ கோபுரத்தில் தலைவர் எஸ்.என். உதயநாயகம் தலைமையில் ஏற்றிவைக்கப்பட்டது.

## எதிர்க்கட்சி தலைவரை பிரதமராக நியமிக்குமாறு ஸ்ரீல சு.க பரிந்துரை

எதிர்க்கட்சி தலைவரை பிரதமராக நியமிக்குமாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எதிர்க்கட்சி தலைவர் பதவியை அடிப்படையாகக் கொண்டு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளோம் என ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.



சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் இடம்பெற்ற கட்சி தலைவர் கூட்டத்தில் கலந்துக்கொண்டதன் பின்னர் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

புதிய ஜனாதிபதி தெரிவு தொடர்பில் கட்சி தலைவர் கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.எதிர்வரும் செவ்வாய்க்கிழமை புதிய ஜனாதிபதிக்கான வேட்பு மனுக்கல் பரிசீலனை செய்யப்பட்டு,

06

## உயர்வான ஜனநாயக தராதரங்களை எம்.பிக்கள் பேணுவது அவசியம்

### மனித உரிமை ஆணைக்குழு வேண்டுகோள்

அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் மிகவும் உயர்வான ஜனநாயக தராதரங்களை பேண வேண்டும் என இலங்கை மனித உரிமை ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் மிகவும் உயர்வான ஜனநாயக தராதரங்களை பேண வேண்டும். இதன் காரணமாக இலங்கை தொடர்ந்தும் பிரதிநிதித்துவ ஜனநாயக நாடாக விளங்க முடியும் என மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அரசமைப்பின் அடிப்படையில் அதிகார மாற்றம் அமைதியான முறையில் இடம்பெறவேண்டும் என தெரிவித்துள்ள மனித உரிமை ஆணைக்குழு, நாடு பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ளும் என எதிர்பார்ப்பதாகவும் இதுவரை ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட அனைவரும் அரசமைப்பு நடைமுறையின் எல்லைக்குள் செயற்படவேண்டும். சட்டமொழுங்கை பேண வேண்டும். பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## சில நாடுகளுக்கான பொதிகள் சேவை, வான் அஞ்சல் இடைநிறுத்தம்

### தபால் திணைக்களம் அறிவிப்பு

சில நாடுகளுக்கான அஞ்சல் பொருட்களை ஏற்றுக்கொள்வது மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக இலங்கைக்கான விமான சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.


இதன்படி, அமெரிக்கா, நெதர்லாந்து, இஸ்ரேல் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கான விமான அஞ்சல் மற்றும் பொருட்களை ஏற்றுக்கொள்வது மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

எரிபொருள் வழங்குவதில் உள்ள சிரமம் காரணமாக நாட்டிற்குள் தபால் போக்குவரத்து தாமதமாகியுள்ளதாக திணைக்களம் மேலும் தெரிவிக்கிறது.

## கொரோனா தொற்று மீண்டும் திடீர் அதிகரிப்பு

### ஒருவர் பலி; 393 பேர் ஆஸ்பத்திரியில்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்து வருவதாக சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு வாரங்களில் பதிவாகும் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுவதாக தெரிவித்துள்ள சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞான பிரிவு தினமும் 15 க்கும் 25க்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் தற்போது இனங்காணப்பட்டு வருவதாகவும் தெரிவித்தது.

நேற்று முன் தினம் 19 தொற்றாளர்களும் 13 ஆம் திகதி 23 தொற்றாளர்களும் 11 ஆம் திகதி பத்து தொற்றாளர்களும்

06

## உலக சந்தையில் தங்க விலையில் வீழ்ச்சி



உலக சந்தையில் தங்கத்தின் விலையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

உலக நாடுகள் பலவற்றில் பொருளாதார நெருக்கடி மற்றும் பணவீக்க அதிகரிப்பு பதிவாகி வரும் பின்னணியில் இவ்வாறு தங்கத்தின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

அண்மைய நாட்களாகவே தங்கத்தின் விலையில் வீழ்ச்சி பதிவாகி வருகின்றது.

இதேவேளை உலக சந்தையில் ஒரு அவுன்ஸ் தக்கத்தின் விலை 1711.2 அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் கொழும்பு செட்டியார் தெருவின் நேற்றைய நிலவரப்படி 24 கரட் தங்கப் பவுணொன்றின் விலை 181,500 ரூபாவாகவும், 22 கரட் தங்கப் பவுணொன்றின் விலை 167,000 ரூபாவாகவும் பதிவாகியது.

## போராட்டம் என்ற பெயரில் ஊடகங்களுக்குக் கட்டளையிடுவது தவறான முன்னுதாரணம்

### சுதந்திர ஊடக இயக்கம்

போராட்டம் என்ற பெயரில் ஊடகங்களுக்குக் கட்டளையிடுவது தவறான முன்னுதாரணமென சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

கடந்த 14ஆம் திகதி தம்மை போராளிகளென அறிமுகம் செய்து கொண்ட குழுவினர் தேசிய தொலைக்காட்சி வளாகத்துக்குள் நுழைந்து நிகழ்ச்சி தயாரிப்பு தொடர்பில் உத்தரவு பிறபித்தமை, நேரடி நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் உன்னிப்பாக அவதானித்த சுதந்திர ஊடக இயக்கம், இந்த வலுக்கட்டாயமான நடவடிக்கை மற்றும் எல்லைகளை மீறிய தீவிர கருத்துக்களை நிராகரிக்கிறதென்றும் தெரிவித்துள்ளது.

சுதந்திர ஊடக இயக்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

06

#### யுத்தத்தை வெற்றிகொண்டவர் எனும் ரீதியில்

## முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய நாட்டுக்கு ஆற்றிய சேவை உயரியது

### பொதுஜன பெரமுன அறிக்கை வெளியீடு

யுத்தத்தை வெற்றிக்கொண்ட பாதுகாப்பு செயலாளராகவும், ஜனாதிபதியாகவும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டுக்கு ஆற்றிய சேவை மதிக்கத்தக்கது. எதிர்கால தலைமுறையினரின் மனங்களில் அவர் நீங்கா இடம்பிடிப்பார் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அறிக்கை வெளியிட்டுள்ளது.


அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, 30 வருடகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு தீர்மானமிக்க பொறுப்புக்களை நிறைவேற்றிய ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் வரலாற்று ரீதியிலான வெற்றியை பெற்றுக்கொண்டார்.

ஜனாதிபதியாக பதவியேற்று மூன்று மாத காலத்துக்குப் பின்னர் கொவிட் 19 பெருந்தொற்று தாக்கத்திலிருந்து நாட்டு மக்களை பாதுகாக்கும் சவாலை ஜனாதிபதியாக அவர் எதிர்கொண்டார். உலக அரசியலில் அதிகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக

06

## ஸ்திரமான அரசு அமையாவிடின் முழுநாடும் முடக்கப்படும் ஆபத்து

### மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் எச்சரிக்கை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஸ்திரமான அரசாங்கமொன்று விரைவில் அமைக்கப்படாவிட்டால் நாட்டை முடக்க வேண்டிய நிலை ஏற்படுமென மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எரிபொருள் போன்ற முக்கியமான அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு தேவையான வெளிநாட்டு கையிருப்பை தேடுவது தொடர்பில் பெரும் நம்பிக்கையற்ற தன்மை நிலவுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு

06

## ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகையின் தொல்பொருட்கள் தொடர்பில் ஆய்வு

ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரி மாளிகையின் தொல்பொருள் நினைவுச் சின்னங்களுக்கு ஏற்பட்ட சேதம் தொடர்பில் அறிக்கையொன்றை பெற்றுக்கொள்ள தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் தீர்மானித்துள்ளார்.

இதற்காக விசேட குழுவொன்றை ஈடுபடுத்தவுள்ளதாக தொல்பொருள் பணிப்பாளர் நாயகம், பேராசிரியர் அநுர மனதுங்க தெரிவித்தார். ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரி மாளிகையில் இருந்து செயற்பாட்டாளர்கள் வெளியேறியதையடுத்து, அந்த வளாகத்தில் உள்ள தொல்பொருள் நினைவுச்சின்னங்களை கண்காணிப்பதற்கு

06

### நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.26 | 249.70 |
| கனடியன் டொலர் | 272.87 | 285.03 |
| யூரோ | 356.13 | 370.70 |
| ஜப்பான் யென் | 2.5880 | 2.6672 |
| சிங்கப்பூர் டொலர் | 252.47 | 263.04 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 422.05 | 439.09 |
| சுவிஸ் பிராங்க் | 361.49 | 377.54 |
| அமெரிக்க டொலர் | 356.95 | 368.30 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 957.26 | கட்டார் ரியால் | 98.28 |
| குவைத் டினார் | 1,172.49 | சவூதி ரியால் | 96.13 |
| ஓமான் ரியால் | 937.40 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.25 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆனி மாதம் 32ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்ஹிஜ்ஜஹ் பிறை 16

## குறள் தரும் சிந்தனை

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து

காலம் கைகூடும் வரையில் கொக்கு போல் பொறுமையாகக் காத்திருக்க வேண்டும். காலம் வாய்ப்பாகக் கிடைத்ததும் அது குறி தவறாமல் குத்துவது போல் செய்து முடிக்க வேண்டும்.

## மலையக தமிழ் சமூகம் புரிந்து கொள்ள வேண்டிய விடயம்

அரகலய என்பது பயன்பாட்டில் உள்ள ஒரு சிங்களச் சொல். சமசமாஜ கட்சி இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது முதல் அச்சொல் சோஷலிஸ்டுகளின் வாய்களில் புழக்கத்தில் இருந்து வந்ததானாலும் அது அர்த்தம் கொண்ட சொல்லாக மாறியது ஒரு மூன்று மாதங்களாகத்தான்.

'அரகலய' என்றால் தமிழில் போராட்டம் என்று அர்த்தம். நமக்கு இது பழைய சொல். தமிழ்நாடோ, அல்லது இலங்கையோ, தமிழர்களுக்கு போராட்டமே வாழ்க்கையாக இருந்து வந்திருக்கிறது. 1965 இல் தமிழகத்தில் நடைபெற்ற இந்தி திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் நூற்றுக்கணக்கில் மனித உயிர்களைப் பலி கொண்டது. பின்னர் தமிழக அரசியலில் காங்கிரசை காணாமல் ஆக்கியது. தி.மு.கவை ஆளும் சக்தியாக மாற்றியது.

கொழும்பு காலிமுகத்திடலில் தமிழர்கள் நடத்திய சில முக்கியமான போராட்டங்கள் அனைத்துமே 'அரகலய' என்ற அர்த்தத்துக்குள் வரும். இனவாத அரசியலுக்கு எதிராகவும் தமது நியாயமான உரிமைகளுக்காகவும் தமிழர்கள் காலிமுகத்திடலில் போராடியிருக்கிறார்கள். ஆனால் நியாயத்துக்கு பதிலாக அராஜகமே அவர்களை நோக்கிப் பாய்ந்தது. குடியுரிமை பறிக்கப்பட்ட போது எஸ். தொண்டமான் தலைமையில் இ.தொ.கா. காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம் செய்த போது குண்டர்களுடன் குதிரைகளும் ஏவப்பட்டு போராட்டம் முறியடிக்கப்பட்டது.

அது மக்களை இனவாத ரீதியாகப் பார்த்து தீர்மானங்களை எடுத்த காலம். நாட்டின் இரு பெரும் கட்சிகளும் அரிசி அரசியலையும் இனவாத அரசியலையும் மையப்படுத்தித்தான் அரசு கட்டில் ஏறி வந்தன.

இனவாத அரசியலால் நசிந்து போன ஒரு மக்கள் கூட்டமாகவே மலையகத் தமிழ்ச் சமூகத்தைக் கருத வேண்டும். உழைக்க வந்தவர்களை டி.எஸ். சேனநாயக்க தன் கட்சி அரசியலுக்காகவும், மலையக சமூகம் சோஷலிஸ்டுகளாக மாறி விடலாம் என்ற அச்சம் காரணமாகவுமே அச்சமூகத்தின் வாக்குரிமையையும் குடியுரிமையையும் பறித்தார். இது, அச்சமூகத்தின் எதிர்காலத்தை இருண்டு போகச் செய்தது.

1989 ஆம் ஆண்டிலேயே அவர்கள் இந்த அடிப்படை உரிமைகளைப் பெற்ற போது சூழல்கள் வெகுவாக மாறி இருந்தன. குடியுரிமையும் வாக்குரிமையும் மீண்டும் கிடைத்த பின்னரும் அவர்களை சங்கம் சார்ந்த அரசியல் மீண்டும் கூறு போட்டு வைத்திருக்கிறது. படித்தவர்களும் அரசியலால் பிரிக்கப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

பாடசாலை ஆசிரியர்களும் அதிபர்களும் தமது பதவி உயர்வு, இடமாற்றம், சம்பள உயர்வு போன்றவற்றுக்கும் ஏனைய உதவிகள் சலுகைகளுக்காகவும் அரசியல்வாதிகளின் கால்களில் விழுந்து கிடக்கின்றனர். ஒரு தரப்பு இன்னொரு தரப்பை எதிரியாகப் பார்க்கிறது. ஒரு இருண்ட காலத்தில் இருந்து மீண்டு வந்திருக்கிறோம். வேற்றுமைகள் இருப்பினும் ஒற்றுமையாக இலக்குகளை அடைய வேண்டிய அவசியம் உள்ளது என்றும் சிந்திப்பவர்கள் மிகவும் குறைவு.

இனவாத மற்றும் மதவாத அரசியலைப் பின்பற்றி கட்சிகளின் பிரசாரங்களுக்கு தலையாட்டி வந்ததால் கிடைத்த பலன் என்பதை சிங்கள மக்கள் நன்கு உணர்ந்து விட்டார்கள். தாம் உணர்ந்ததை எவ்வாறு செயற்படுத்தப் போகிறார்கள் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஆனால் மலையக சமூகம் தான் தொடர்ச்சியாக இழைத்து வரும் தவறுகளை உணர்ந்ததாகவும் தெரியவில்லை, கட்சி அரசியலால் அரசியல் பிரமுகர்களே நன்மை அடைகிறார்கள், நாம் அல்ல என்பதை அறிந்து கொண்ட மாதிரியும் தெரியவில்லை. தலையாட்டி பொம்மைகளாக இருப்பதாகவே கருத வேண்டியிருக்கிறது.


மலையக அரசியல் இன்றைக்கும் கட்சிகளினாலேயே கட்டுப்படுத்தப்பட்டு தீர்மானிக்கப்படுகிறதே தவிர, அதையும் தாண்டி சுதந்திரமாக சிந்திக்கக் கூடிய குரல்கள் மெலிதாகவே ஒலிக்கின்றன. ஜனநாயக அரசியலில் மக்களே சக்திவாய்ந்தவர்கள் என்பதை தாமதமாகவேனும் சிங்கள மக்கள் புரிந்துகொண்டிருக்கிறார்கள். அந்தப் புரிதல் மலையக சமூகத்திலும் ஏற்படுவதற்கான சரியான சூழல்கள் காணப்பட்டாலும், அதை உரத்துச் சொல்வதற்கான ஒரு சக்தி வாய்ந்த அமைப்பு அங்கில்லை அல்லது செவிமடுக்க ஆளில்லை என்றுதான் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

editor.tkn@lakehouse.lk

# நாட்டின் அரசியலமைப்புக்கு உட்பட்டதாகவே அனைத்து செயற்பாடுகளும் முன்னெடுப்பு

ஜனாதிபதியாகப் பதவி வகித்த கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியை இராஜினாமா செய்ததையடுத்து, பதில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நேற்று பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். கோட்டாபய ராஜபக்ஷ உத்தியோகபூர்வமாக ஜனாதிபதி பதவியிலிருந்து விலகியுள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன நேற்றுக் காலை அறிவித்ததையடுத்து நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம் பதில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுக் கொண்டார்.

ஜுலை 14 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் உத்தியோகபூர்வமாக கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.



ஏழு நாட்களுக்குள் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான நாடாளுமன்ற செயற்பாடுகளை நிறைவு செய்ய உத்தேசித்துள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன அறிவித்துள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் ஜனநாயகத்தை நிலைநிறுத்துமாறு சபாநாயகர் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் நாடாளுமன்றத்திடமும் கேட்டுக் கொண்டார்.

பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு உரையாற்றுகையில், "குறுகிய காலத்திற்கு நான் பதில் ஜனாதிபதியாக பதவி வகிக்க



### 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினை முழுமையாக அமுல்படுத்துவதற்கு பூர்வாங்க ஏற்பாடுகள்

நாட்டின் அரசியலமைப்பின்படி புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் வரை ஜனாதிபதியின் அதிகாரங்கள், பொறுப்புக்கள் மற்றும் அரசியலமைப்பினால் பொறுப்பாக்கப்பட்டுள்ள விடயங்களை பதில் ஜனாதிபதி செயற்படுத்துவார்.

உள்ளேன. மக்கள் அரசியலில் பாரிய வித்தியாசத்தை எதிர்பார்க்கின்றனர். அதற்கு என்னால் இயலுமான விடயங்களைச் செய்வேன். 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினை முழுமையாக அமுல்படுத்துவதற்கான பூர்வாங்க

### பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க உறுதிமொழி

ஏற்பாடுகளை புதிய ஜனாதிபதியின் பொருட்டு நான் முன்னெடுக்கவுள்ளேன். நாட்டில் சட்டம் மற்றும் அமைதியை நிலைநாட்டும் நடவடிக்கைகளை முன்னெடுப்பேன். சாத்வீக வழியில் போராட்டங்களை முன்னெடுக்க மக்களுக்கு உரிமை உள்ளது" எனக் குறிப்பிட்டார்.

புதிய ஜனாதிபதி தெரிவின் போது சிலர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழுத்தம் கொடுக்க முனைவதாகவும், இதனால் பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முழுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சிலர் தீ வைப்பு சம்பவங்களில் ஈடுபட வாய்ப்பிருப்பதாகக் குறிப்பிட்ட அவர், இரண்டு துப்பாக்கிகளும் குண்டுகளும் காணாமற் போயுள்ளதை சுட்டிக்காட்டினார். பாதுகாப்புத் தரப்பினர் 24 பேர் காயமடைந்திருப்பதை நினைவுகூர்ந்த அவர், உண்மையான சாத்வீகப் போராட்டக்காரர்கள் அவ்வாறான வன்முறை செயற்பாடுகளில் ஈடுபட மாட்டார்கள் என நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

கிளர்ச்சிக்காரர்களுக்கும் சாத்வீகப் போராட்டக்காரர்களுக்கும் இடையில் வித்தியாசம் இருப்பதாகவும் கிளர்ச்சிகளில் ஈடுபடுகின்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார். எனினும், அரசியலமைப்பிற்கு எதிராக எவ்வித நடவடிக்கையையும் எடுக்க மாட்டேன் என அவர் உறுதிமொழி வழங்கினார்.

எரிபொருள், மின்சாரம், குடிநீர், உணவு விநியோகம் வீழ்ச்சியடைவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகக் கூறிய பதில் ஜனாதிபதி, முப்படையினர், பொலிஸாரைக் கொண்டு குழுவொன்றை அமைத்து, அது தொடர்பிலான ஆலோசனைகளை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்கான முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் பதில் ஜனாதிபதியாக பதவி வகிக்கும் காலத்தில் இரண்டு தீர்மானங்களை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுஇவ்விதமிருக்க எதிர்வரும் 19 ஆம் திகதி வேட்புமனுக்கள் கோரப்படவிருப்பதுடன், 20 ஆம் திகதி புதிய ஜனாதிபதி ஒருவரை பாராளுமன்றத்தின் ஊடாகத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு நடத்தப்படும்.

புதிய ஜனாதிபதிப் பதவிக்கு பதவிக்கு உறுப்பினர் ஒருவரின் பெயர் மட்டுமே முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டிருந்தால் அவர் அந்தகைய பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென செயலாளர் நாயகம் பாராளுமன்றத்துக்கு அறிவிப்பார். ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் அவ்வாறு முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டு இருப்பின் வாக்கெடுப்பு நடத்தப்படும்.

வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட நேரத்திலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குப் பிந்தாத ஒரு திகதியில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என சட்டம் குறிப்பிடுகிறது. புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கு இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படும். தெரிவத்தாட்சி அலுவலரினால் வாக்குச் சீட்டுக்கள் வழங்கப்பட்டு வாக்களிப்பு இடம்பெறும். வாக்களிப்பு பூர்த்தியடைந்ததும் வாக்குகள் எண்ணப்பட்டு வெற்றி பெற்றவர் அறிவிக்கப்படுவார்.

# புகையிலைப் பாவனை இல்லாத பிரதேசமாக மட்டக்களப்பு விரைவில் மாற்றமடைந்து விடும்

நாட்டில் 15 வீதமாகக் காணப்பட்ட புகைப்பிடித்தல் பழக்கம் தற்போது 9.1 வீதமாக குறைவடைந்துள்ளது என மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் தெரிவித்தார்.

எமது நாட்டில் 15 வீதம் ஆகக் காணப்பட்ட புகைப்பிடித்தல் பழக்க அளவு தற்போது 9.1 வீதமாகக் குறைவடைந்து மிகச் சிறந்த முன்னடைவை நோக்கிச் செல்வதனை காணக் கூடியதாக உள்ளது. இது தொடர்பாக விழிப்பூட்டும் விளம்பரப்பலகை ஒன்று பொதுமக்கள் பார்வையிடக் கூடிய இடத்தில் எமது பணிமனைக்கு வெளியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. மிக விரைவில் இப்பிரதேசம் புகையிலைப் பாவனைக்கு தடை செய்யப்பட்ட பிரதேசமாக மாறி விடுமென்ற நம்பிக்கை தென்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.



### மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் நம்பிக்கை

மாவட்ட சுகாதார பிராந்திய சேவைகள் பணிப்பாளர் வைத்திய அதிகாரி ஜீ.சுகுணன் தலைமையில், மட்டக்களப்பு சுகாதார பிராந்திய பணிமனையில் புகையிலை அற்ற பிரதேசமாக அதனை அண்டிய பிரதேசங்களையும் உள்ளடக்கியதாக காட்சிப்படுத்தல் விளம்பரப் பலகை ஒன்று அண்மையில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. அங்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"எமது நாட்டில் புற்றுநோய் மற்றும் சுவாசப்பை நோய்களை பெருமளவில் ஏற்படுத்தும் மிகப் பிரதான காரணிகளாக புகைப்பிடித்தலும் அதனுடன் இணைந்த புகையிலை சார்ந்தவற்றை உற்கொள்ளுதலுமே காணப்படுகின்றன. இலங்கை பூராகவும் புகையிலை பாவிப்பதை நிறுத்தும் முகமாகவும், புற்றுநோய், சுவாசப்பை நோய்களை தடுக்கும் முகமாகவும் பாரியளவில் நடவடிகைகள் எடுக்கப்படுகின்றன.




அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படுகின்ற 14 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் ஒன்றுக்கும் மேற்பட்ட புகையிலை பாவனை அற்ற இடங்களை உருவாக்க மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கின்றனர். அந்த இடங்களில் புகையிலை பாவிப்பதோ, விற்பதோ அல்லது அது சம்பந்தப்பட்டவற்றை கையாள்வதோ நிறுத்தப்படும். இது மக்களுக்கு அறிவூட்டுவதிலிருந்து ஆரம்பித்து சட்ட நடவடிக்கைகள் வரை கையாண்டு பூர்த்தி செய்யப்படும்.

மாணவர்கள், இளைஞர்கள் புகைத்தல் பாவனையிலிருந்து விடுபடுவதற்கு ஒவ்வொரு பெற்றோரும், பாடசாலை சமூகமும் விழிப்புடன் செயற்பட வேண்டும். இவ்வாறானவர்களை அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு புகைத்தலினால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து சரியாக தெளிவூட்டப்படுகின்றது.

பொது இடங்களில் புகைப்பது தடை செய்யப்பட்டுள்ளதுடன் குறைந்த வயதினருக்கு புகைத்தல் பொருட்கள் விற்பனை செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும். அதிக விலைகொடுத்து புகைத்தல் பொருட்களை இளஞ்சமுகத்தினருக்கு விற்பனை செய்வது பாரிய குற்றமாகும்.

மட்டக்களப்பு சுகாதார பிராந்திய பணிமனையும், தொற்றா நோய்க்கான பிரிவும் சுகாதார வைத்திய அதிகாரிகளுடன் இணைந்து பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களை முதன்மையாகக் கொண்டு இவ்விடயம் முன்னெடுக்கப்படுகின்றது" என அவர் இதன் போது மேலும் தெரிவித்தார்.

க.விஜயரெத்தினம்...
(வெல்லாவெளி தினகரன் நிருபர்)

# காலத்தால் அழியாத திரைப்படங்களை வழங்கிய பிரதாப் போத்தன் காலமானார்

பிரபல நடிகரும் இயக்குநருமான பிரதாப் போத்தன் சென்னையில் உடல்நலக் குறைவால் நேற்று காலமானார்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி உள்ளிட்ட மொழிகளில் 100க்கும் மேற்பட்ட படங்களில் பிரதாப் போத்தன் நடித்துள்ளார்.

அவரது இயக்கத்தில் மீண்டும் ஒரு காதல் கதை, வெற்றிவிழா, சீவலப்பேரி பாண்டி, மார்த்தாண்டன் உள்ளிட்ட படங்கள் வெளியாகியுள்ளன. இதேபோல தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி உள்ளிட்ட மொழிகளில் 100க்கும் மேற்பட்ட படங்களில் இவர் நடித்துள்ளார்.

அவரது நடிப்பில் 'பொன்மகள் வந்தாள்' படம் வெளியானது. தற்போது சுந்தர் சியின் 'காபி வித் காதல்' படத்தில் நடித்துள்ளார். இந்திய அளவில் நடிப்பால் தனது சிறப்பான ஆளுமையை இவர்



வெளிப்படுத்தி வந்தார். ஆக்ரோஷமான நடிப்பை வறுமையின் நிறம் சிவப்பு போன்ற படங்களில் காண முடிந்தது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வெளியான தனுஷின் 'பொல்லாதவன்' படத்தில் அப்பா பாத்திரத்தில் நடித்திருந்தார். அதில் 'டென்ஷன் டென்ஷன்' என்று இவர் கூறுவது சிறப்பாக அமைந்தது.

மலையாள படங்கள் மூலமே புகழ் பெற்றிருந்தார் பிரதாப் போத்தன். 'தகர' என்ற படத்திற்காக சிறந்த நடிகர் விருதை இவர் பெற்றுள்ளார். தமிழில் பாலு மகேந்திரா இயக்கத்தில் 'அழியாத கோலங்கள்' படம் மூலமே இவர் தமிழில் அறிமுகமானார்.

தொடர்ந்து இவரது காலத்தால் அழியாத படங்களாக வறுமையின் நிறம் சிகப்பு, மூடுபனி உள்ளிட்ட படங்கள் சிறப்பாக அமைந்த படங்கள் ஆகம். மூடுபனியில் இவர் ஏற்று நடித்திருந்த 'சைக்கோ கில்லர்' கதாபாத்திரம் தமிழ்த் திரையுலகில் சிறப்பான நடிப்பைக் கொடுத்தது. இதில் 'என் இனிய பொன் நிலாவே' என்ற பாடல் மறக்க முடியாதது.

வறுமையின் நிறம் சிகப்பு, வாழ்வே மாயம் போன்ற படங்களில் ஸ்ரீதேவியை ஒருதலையாக காதலிப்பார் பிரதாப் போத்தன். இதில் வாழ்வே மாயத்தில் ஸ்ரீதேவியை திருமணமும் செய்து கொள்வார். இதேபோல 'பன்னீர் புஷ்பங்கள்' இவர் நடிப்பில் சிறப்பான படம்.

தொடர்ந்து விசு படங்களிலும் இவரை அதிகமாக காண முடிந்தது. இந்தப் படங்களில் இயல்பான நடிப்பை வெளிப்படுத்தி ரசிகர்களை கட்டிப் போட்டார்.

காலத்தால் அழியாத தமிழ் சினிமாவின் பல படங்களில் தன்னுடைய பங்களிப்பை சிறப்பாக செய்திருந்த பிரதாப் போத்தன் தற்போது தன்னுடைய 69வது வயதில் உயிரிழந்துள்ளார். அவர் மறைந்தாலும் அவருடைய கதாபாத்திரங்கள் அவரது பெருமையை இறுதிவரை நிலைநிறுத்தும் என்பதில் ஐயமில்லை.

# இலங்கையில் உணவு உற்பத்தியை பெருக்குவதற்கான உதவிகளை வழங்குவதில் இந்தியா ஆர்வம்



**பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தத்தளிக்கின்ற அண்டை நாடான இலங்கைக்கு இந்தியா தொடர்ந்து உதவிக்கரம் நீட்டி வருகிறது. வெளிநாட்டுக் கடன்களில் சிக்கியுள்ள இலங்கைக்கு இந்தியா இந்த ஆண்டு ஜனவரி முதல் 3 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் (இந்திய நாணயப் பெறுமதியில் சுமார் ரூ.24 ஆயிரம் கோடி) கடன் உதவிகள் வழங்குவதற்கு உறுதி அளித்துள்ளது.**

இந்தியா வெறுமனே உணவு மற்றும் எரிபொருள் நிவாரணங்களை மாத்திரம் இலங்கைக்கு வழங்கவில்லை. உணவுத் தட்டுப்பாடு இலங்கையில் ஏற்படுவதைத் தடுப்பதற்கான முன்னேற்பாடான உதவிகளை வழங்குவதிலும் இந்தியா கவனம் செலுத்தி வருகின்றது.

அவ்வாறான உதவிகளில் ஒன்றுதான் இலங்கையில் நெற்செய்கையைப் பெருக்குவதற்காக இந்தியா வழங்குகின்ற யூரியா இரசாயனப் பசளை ஆகும். இலங்கையில் உணவுப் பற்றாக்குறை தோன்றுவதற்கான ஆபத்து உள்ளதாக நிபுணர்கள் பலரும் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்து வருகின்றனர். நாட்டில் உணவு உற்பத்தியை உடனடியாக அதிகரிப்பதன் மூலமே உணவுப் பற்றாக்குறையை வெற்றி கொள்ள முடியுமென்பதே அவர்களது ஆலோசனை ஆகும்.

எனவேதான் இலங்கைக்கு யூரியா பசளையை வழங்குவதன் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு இந்தியா உதவி புரிவதற்கு முன்வந்துள்ளது. உணவு நிவாரணங்களை வழங்குவதென்பது மக்களின் உணவுத் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கான உடனடித் தீர்வாக அமையலாம்.

ஆனால் அது நிரந்தரமான தீர்வாக அமைந்துவிடப் போவதில்லை. இலங்கையில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான உதவிகளை வழங்குவதன் ஊடாகவே அம்மக்களின் உணவுப் பற்றாக்குறையைப் போக்குவதற்கான நிரந்தரத் தீர்வைக் காண முடியுமென்பதில் இந்தியா உறுதியாக உள்ளது. இதன் காரணமாகவே இந்தியாவில் இருந்து அண்மையில் யூரியா பசளையின் முதற்கட்டத் தொகுதி இலங்கையை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது.

உணவு தானிய தட்டுப்பாட்டில் தவித்து வருகிற இலங்கையின் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஏதுவாக 65 ஆயிரம் தொன் யூரியா உரம் வழங்குவதற்கு இந்தியா உறுதி அளித்திருந்தது. இந்த நிலையில், இந்தியா இலங்கைக்கு 44 ஆயிரம் தொன் யூரியா உரத்தை சமீபத்தில் வழங்கியிருந்தது. இந்த யூரியா பசளை அண்மையில் கொழும்பு வந்து சேர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நெற்செய்கையை துரிதமாக அதிகரிப்பதற்காக இந்தியாவிடம் இலங்கை கடன் உதவி கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. உரத்தட்டுப்பாடு நிலவுவதால், உணவுப் பொருள் நெருக்கடி ஏற்படும் அபாயம் உள்ளதாக இலங்கை சுட்டிக் காட்டியிருந்தது. இதனையடுத்தே இலங்கைக்கு உடனடியாக யூரியாவை இந்தியா வழங்கியுள்ளது.

நெற்செய்கைக்காக 65,000 மெட்ரிக் தொன் யூரியா உரம் தேவையென்பதே இலங்கை விடுத்திருந்த கோரிக்கையாகும். உடனடியாக உரம் இறக்குமதி செய்வதற்கு இந்தியாவிடம், இலங்கை கடன் உதவி கோரியிருந்தது. இந்நிலையில், உர இறக்குமதிக்காக இந்தியா 55 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கடனை இலங்கைக்கு வழங்கி உள்ளதாகவும், இது இலங்கையின் மோசமான பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்க உதவும் என்றும் இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்திருந்தது.



இந்திய ஏற்றுமதிஇறக்குமதி வங்கியான எக்ஸிம் வங்கிக்கும் இலங்கைக்கும் இடையில் இக்கடனுதவி குறித்த உடன்படிக்கை ஒன்று இம்மாதம் (10 ஜூன் 2022) கொழும்பில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் இலங்கை மற்றும் இந்தியாவின் சிரேஷ்ட அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கை அரசாங்கம் 'யால' பருவகால நெற்செய்கைக்குரிய யூரியா உரத்தினை பெற்றுக் கொள்வதற்கான ஆதரவை இந்த கடனுதவித் திட்டம் வழங்குகின்றது. முக்கியத்துவம் வாய்ந்த இத்தேவையினை அடிப்படையாகக் கொண்டு, உரக் கொள்வனவுக்கான சகல செயற்பாடுகளையும் துரிதமாக நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசாங்கமும் எக்ஸிம் வங்கியும் இணங்கியுள்ளமையால்

## இலங்கையில் சூரியகாந்தி செய்கைக்கு ஏதுவான சீதோஷண நிலை; அதற்கான ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு இந்தியா விருப்பம்



அவசர உதவியாக வந்து சேர்ந்துள்ள யூரியா பசளை

இந்த உரத்தொகுதி இலங்கையை வந்தடைந்தது. இந்த உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வின் போது இலங்கை சார்பில் இந்தியாவுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டிருந்தது. இதேவேளை இக்கடனுதவி குறித்த சகல செயற்பாடுகளையும் மிகவும் துரிதமாக நிறைவேற்றியமையானது, இலங்கை மக்களின் நலன்களுக்கு இந்திய அரசாங்கம் வழங்கும் முக்கியத்துவத்தினை பிரதிபலிப்பதாக இந்திய உயர்ஸ்தானிகர் சுட்டிக்காட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

'அயலுறவுக்கு முதலிடம்' என்ற கொள்கையின் அடிப்படையிலும் இலங்கையின் சிறந்த நண்பனாகவும் பங்காளியாகவும், இந்தியா கடந்த சில மாதங்களில் இலங்கை மக்களுக்கு பல்வேறு பரிமாணங்களில் உதவிகளை வழங்கியுள்ளது. 3.5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருளாதார உதவி முதல் உணவுப் பொருட்கள், மருந்துகள், எரிபொருள் மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசிய பொருட்களை வழங்கி இலங்கையின் உணவு, சுகாதாரம் மற்றும் சக்தி பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு உதவிகளை வழங்குதல் வரையில் இந்த ஆதரவானது நீடித்துச் செல்கின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்தியா தனது உரத் தேவையை ஓமான் நாட்டிலிருந்தே பெற்றுக் கொள்வதாகவும், அந்த வகையில் இலங்கைக்கு வழங்குவதாக உறுதியளித்த உரம் ஓமான் நாட்டில் கொள்வனவு செய்யப்பட்டு கப்பல் மூலம் நேரடியாக இலங்கைக்கு வரவழைக்கப்படவுள்ளதாகவும் இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவித்திருந்தார். அதன் அடிப்படையில் இந்திய உரத்தின் முதல் தொகுதியானது இலங்கையை வந்தடைந்திருந்தது.

இரசாயனப் பசளை உதவி ஒருபுறமிருக்கையில் இலங்கையில் வீழ்ச்சியை எதிர்நோக்கியுள்ள கால்நடை வளர்ப்பு தொழில்துறையை மேம்படுத்தவும் உதவிகளை வழங்க எதிர்பார்த்துள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் சீதோஷ்ண நிலையைப் பொறுத்தவரை சூரியகாந்தி பயிர்ச்செய்கைக்கு உகந்த சூழல் காணப்படுவதாகவும், சூரிய காந்தி எண்ணெய்க்குச் சர்வதேச சந்தையில் பெரும் கிராக்கி இருப்பதால் அதனைப் பயிரிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் இந்திய உதவிகளைப் பெற்றுத் தருவது குறித்து கவனம் செலுத்தப்படும் என்றும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லே தெரிவித்துள்ளாரென்பது குறிப்பிடத்தக்கது.

**எஸ்.சாரங்கன்...**

# உக்ரைன் மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ள இவ்வருடத்துக்கான G 7 மாநாடு



**உலகில் முன்னேறிய நாடுகள் என்று கருதப்படும் கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகிய ஏழு நாடுகள் நாடுகள் அங்கம் வகிக்கும் G7 (Group of Seven) அமைப்பின் 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மாநாடு அண்மையில் நடந்து முடிந்திருக்கிறது.**

ஆரம்பத்தில் ஆறு நாடுகள் இணைந்து 1975 இல் உருவாக்கிய இந்த பணக்கார நாடுகள் கூட்டில் 1976 இல் கனடாவும், 1998 இல் ரஷ்யாவும் இணைந்து G8 ஆகியது.

உக்ரைனின் ஒரு பகுதியாக இருந்த கிரீமியாவை ரஷ்யா ஆக்கிரமித்தமை காரணமாக 2014 இல் இந்தக் கூட்டமைப்பில் இருந்து ரஷ்யா நீக்கப்பட, அதன் பிறகு இன்றுவரை இந்த அமைப்பு ஜி 7 கூட்டமைப்பாக செயல்பட்டு வருகிறது.

உலகின் அதிக மக்கள் தொகையையும் இரண்டாவது பெரிய பொருளாதாரத்தையும் கொண்டுள்ள சீனாவின் தனிநபர் சொத்து குறைவாக இருக்கிறது. ஏனைய நாடுகளின் பொருளாதாரம் மேம்பட்டிருக்கும் அளவிற்கு சீனா இல்லை என்பன போன்ற காரணங்களை முன்னிறுத்தி சீனா இக்குழுவில் இடம்பெற அனுமதிக்கப்படவில்லை.

இவர்கள் நடத்தும் மாநாடுகளில் இந்த ஏழு நாடுகளின் தலைவர்களுடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவரும், சிறப்பு அழைப்பாளிகளாக சில நட்பு நாடுகளின் தலைவர்களும் கலந்து கொள்வது மரபாக இருந்து வருகிறது.


ஜெர்மனியின் ஸ்க்லாஸ் எல்மாவோ நகரில் கடந்த June மாதம் 26ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை இடம்பெற்ற இந்த அமைப்பின் இந்த வருடத்திற்கான (2022) உச்சிமாநாட்டில், இந்தியா, ஆர்ஜென்டீனா, உக்ரைன், இந்தோனேசியா, தென் ஆபிரிக்கா செனெகல் ஆகிய நாடுகளின் தலைவர்கள் சிலர் நேரடியாகவும் சிலர் காணொளி மூலமாகவும் சிறப்பு அழைப்பாளிகளாக பங்குபற்றினர்.

நடப்பு உலகை பல வழிகளிலும் உலுக்கிக் கொண்டிருக்கும் ரஷ்யஉக்ரைன் விவகாரத்தில் ஒரு தெளிவான நிலைப்பாடு எடுக்கப்படும் என்கின்ற உக்ரைன் பாமர மக்களின் எதிர்பார்ப்பு பொய்த்த நிலையில் முடிவடைந் திருக்கிறது இந்த மாநாடு.

மாநாட்டில் பங்கேற்றோர் உக்ரைன் விவகாரத்தை கையாண்டவிதம் இந்த அதிகார மோதலால் அதிகம் பாதிப்படைந்திருக்கும் அப்பாவி உக்ரைன் மக்களுக்கு பெருத்த ஏமாற்றத்தையே அளித்திருக்கும் என்பது திண்ணம் .

உக்ரைனுக்கு ஆதரவான நிலைப்பாட்டை மேலும் அதிகரிப்பதாக அறிவித்த ஜி 7 மாநாடு, ரஷ்யாவின் வேகத்தைக் கட்டுப்படுத்தும் விதமான எந்த திட்டங்களையும் வெளியிடாமல் ரஷ்யா மீதான தடைகளையும் அதன் எரிபொருள்,தங்கம் போன்ற ஏற்றுமதிகளை தடை செய்யும் மூலோபாயங்களை மேலும் அதிகரிப்பதாக அறிவித்து இம்மாநாட்டில் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.





காணொலி மூலம் இம்மாநாட்டில் உரையாற்றிய உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி, தங்கள் நாட்டுக்கு எதிராக ரஷ்யா நடத்தி வரும் போரை, குளிர் காலத்துக்குள் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். அதற்கு ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகளை தீவிரப்படுத்த வேண்டும். புட்டினின் படைகளுக்கு எதிரான போராட்டத்துக்கு மேலும் ஆயுதங்களை வழங்க வேண்டும் ஆகிய வேண்டுகோள்களை முன்வைக்க அதனை வழிமொழிவது போன்ற கருத்துக்களையே G7 தலைவர்களும் முன்வைத்தனர்.

இந்த விவகாரம் குறித்து தீவிரமாக விவாதிக்கப்பட்ட போதும், அனைத்தும் நடுநிலை எதுவுமற்று உக்ரைனுக்கு ஆதரவாக, அதற்கு பொருளாதார, ஆயுத ஆதரவுகளை மேலும் அதிகரித்து போரை தூண்டி விடும் வகையிலான கருத்துக்களாகவே இருந்தன. உலக சமாதான விரும்பிகள், யதார்த்தவாதிகள் மத்தியில் இது கடும் அதிருப்தியையும் G 7 நாடுகள் மீதான வெறுப்பையும் அதிகரித்துள்ளது.

இன்றைய உலக பொருளாதாரத்தையே நிலைகுலைய வைத்துள்ள பல ஆயிரம் அப்பாவிகளை பலிகொண்டும், பல இலட்சம் உக்ரைன் மக்களை அகதிகள் ஆக்கியும் வைத்துக் கொண்டிருக்கும் இந்த ரஷ்யஉக்ரேனிய யுத்தம் தொடர்பில் மட்டுமல்லாது எடுக்கப்பட்ட வேறும் சில முடிவுகளும் ஆரோக்கியமானதாக இல்லை.

சீனா நடைமுறைப்படுத்திவரும் சாலை வழி திட்டத்தை எதிர்கொள்ளும் வகையில், அமெரிக்காவால் முன்வைக்கப் பட்ட சர்வதேச கூட்டமைப்புத் திட்டத்தை 2027 ஆம் ஆண்டிற்குள் நிறைவு செய்யவேண்டும் எனவும் அதற்காக மேலும் 45 இலட்சம் கோடி டொலர் பணம் ஒதுக்கப்படுவதாகவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சர்வதேச அளவில் ரஷ்யாவின் வளர்ச்சியை விட சீனாவின் அதிவேக வளர்ச்சியே ஜி7 நாடுகளுக்கு உறுத்தலாக இருப்பதையே இத்தீர்மானம் வெளிப்படுத்துகிறது.

இது தவிர மக்களின் பேச்சு சுதந்திரத்தைக் காக்க முன்னுரிமை அளிக்கப்படும், அமைதிவழி போராட்டங்களுக்கு மதிப்பளிக்கப்படும், இணையவழி பாதுகாப்பு உறுதி செய்யப்படும், பருவநிலை மாற்றம், கொரோனா பரவல், சர்வதேச விதிகள் அடிப்படையிலான செயல்பாடு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்தல் என்பன இவ்வருட ஜி 7 மாநாட்டுக் கூட்டறிக்கையின் கூற்றுக்களில் சிலவாகும்.

இவ்வருட மாநாட்டின் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்றவர்களில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி விசேட கவனம் பெற்றவராக காணப்பட்டதையும் அவதானிக்க முடிந்தது.

உக்ரைன் ரஷ்ய யுத்தத்தை உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு என வர்ணித்து வரும் ஜி7 நாட்டுத் தலைவர்களுக்கு, ரஷ்யாவுடன் தொடர்ந்து பொருளாதார உறவைப் பேணி வரும் இந்தியாவை புறக்கணிக்க முடியவில்லை என்பது அவதானிக்கத்தக்கது. சீனாவுக்கு எதிரான தங்கள் எதிர்காலத் திட்டத்துக்கு இந்தியாவின் உதவி தேவை என்பதும் இதற்குக் காரணமாக இருக்கக் கூடும்.

மொத்தத்தில் ஜி7 மாநாடு உக்ரைன் அரசுக்கு ஏமாற்றத்தையும் அங்கு பெரும் அவதியுடன் வாழும் மக்களுக்கு ஏமாற்றத்தையுமே அளித்திருக்கிறது. இது எதிர்பார்க்கப்பட்ட வேதனைக்குரிய ஒன்றே என்கின்றனர் சர்வதேச நடுநிலை ஆய்வாளர்கள்.

சர்வதேச அளவில் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக ரூ. 33,000 கோடி செலவிட ஜி 7 நாடுகள் முடிவெடுத்திருப்பதை மட்டும் பாராட்டுக்குரியதாக எடுத்துக் கொள்ளலாம். அதுதவிர கூடிக் கலைந்திருக்கிறது 2022 இன் G7மாநாடு.

**கோவை நந்தன்...**

# அமெரிக்க பொருளாதாரத்தை வாழ வைக்கும் இந்திய மக்கள்!

**அமெரிக்காவுக்காக பணிபுரியும் இந்திய தொழில்நுட்பத் துறை நிறுவனங்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து கொண்டே வருகிறது. கடந்த ஆண்டு எடுக்கப்பட்ட புள்ளிவிபரத்தின்படி 2 இலட்சத்துக்கும் அதிகமான இந்திய தொழில்நுட்ப பணியாளர்கள் அமெரிக்காவுக்காக பணி புரிவதாகவும் அவர்களின் சராசரி சம்பளம் 85 இலட்ச ரூபா என்றும் கூறப்படுகிறது.**

அமெரிக்காவின் பொருளாதாரத்திற்கு இந்திய தொழில்நுட்பத் துறை ஒரு விதத்தில் உதவி செய்து வருகின்றது என்ற தகவல் பெரும் ஆச்சரியத்தை அளித்துள்ளது.

இந்திய தொழில்நுட்பத் துறையில் கடந்த ஆண்டு அமெரிக்காவில் 207,000 பேர் நேரடியாகப் பணியமர்த்தப்பட்டதாக அறிக்கையொன்று தெரிவித்துள்ளது. அவர்களுக்கான சராசரி ஊதியம் 2021 ஆம் ஆண்டு $106,360 என்றும் இந்த தொகை இந்திய மதிப்பில் சுமார் 85 இலட்ச ரூபாய் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்திய தொழில்நுட்பத் துறையின் நேரடித் தாக்கம் காரணமாக அமெரிக்க பொருளாதாரம் மொத்தம் 396 பில்லியன் டொலர் விற்பனையை உருவாக்க உதவியுள்ளது. 1.6 மில்லியன் வேலைகளை இந்திய தொழில்நுட்ப துறை செய்வதால் அமெரிக்க பொருளாதாரத்திற்கு $198 பில்லியனுக்கும் அதிகமாக பெற்றுள்ளது. இது 2021 ஆம் ஆண்டு 20 அமெரிக்க மாநிலங்களின் ஒருங்கிணைந்த பொருளாதாரங்களை விட அதிகமான தொகை ஆகும்.





இந்திய தொழில்நுட்ப நிறுவனங்கள் $1.1 பில்லியனுக்கும் அதிகமான பங்களிப்பை அளித்துள்ளதாகவும், அமெரிக்காவில் உள்ள 180 பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், சமூகக் கல்லூரிகள் மற்றும் பிறவற்றுடன் கூட்டணிகளை உருவாக்கியுள்ளன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உள்ளூர் முதலீடுகள், தொழிலாளர் சக்தியை அதிகரித்தல், மற்றும் உள்ளூர் பணியாளர்களுக்கு திறன் மேம்பாடு ஆகியவற்றை செயல்படுத்துவதன் மூலம் இந்திய தொழில்நுட்ப துறை அமெரிக்க பொருளாதாரத்திற்கு முக்கியமான பங்களிப்புகளை செய்கிறது.

# தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் குணமடைந்து வருகிறார்

## - காவேரி மருத்துவமனை அறிக்கை



திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து வருவதாகவும் அவர் நலமுடன் இருப்பதாகவும் காவேரி மருத்துவமனை அறிக்கை வெளியிட்டுள்ளது.

இரண்டு நாட்களுக்கு முன்பு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து, அவர் தனிமைப்படுத்திக் கொண்டு வீட்டிலிருந்தே அரசுப் பணிகளை கவனித்து வந்தார். இதையடுத்து கொரோனா பரிசோதனைகள் மற்றும் மருத்துவக் கண்காணிப்புக்காக சென்னை ஆழ்வார்பேட்டையிலுள்ள காவேரி மருத்துவமனையில் வியாழக்கிழமை அனுமதிக்கப்பட்டார்.

நேற்று வெள்ளிக்கிழமை மருத்துவமனை வெளியிட்டுள்ள அறிக்கையில், 'கொரோனா தொற்றுக்கான கண்காணிப்புக்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பரிசோதனைகள் முடிந்து கொரோனா சிகிச்சை வழிமுறைகளின்படி மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மு.க.ஸ்டாலின் குணமடைந்து வருகிறார். அவர் நலமுடன் இருக்கிறார். இன்னும் சில நாட்கள் ஓய்வெடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது' என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முன்னாள் ஜனாதிபதி... (03ஆம் பக்கத் தொடர்)

பல்வேறு செயற்பாடுகள் இடம்பெறுவதை அவதானித்தோம். அதிகாரம் மற்றும் பதவி ஆகியவற்றை கைவிடுவது அரிதானது.அரசியல் அதிகாரத்தை துறந்தவர்கள் விரல் நீட்டி சுட்டிக்காட்ட கூடியவர்கள். அன்றும்,இன்றும் இலங்கை வரலாற்றில் எந்த ஜனாதிபதியும் தனது பதவி காலம் நிறைவடையும் முன்னர் பதவி விலகவில்லை. அது நெருக்கடியான தீர்மானமாகும்.

ஜனாதிபதி (முன்னாள்)அந்த நெருக்கடியான சூழ்நிலையை எதிர்கொண்டார். பதவி காலத்தில் அரைவாசி காலம் உள்ள நிலையில் அவர் பதவி விலகல் கடிதத்தில் கைச்சாத்திட்டார். யுத்தத்தை வெற்றிக்கொண்ட பாதுகாப்பு செயலாளராகவும்,ஜனாதிபதியாகவும் நாட்டுக்கு அவர் ஆற்றிய சேவை மதிக்கத்தக்கது.எதிர்கால தலைமுறையினரின் மனங்களில் அவர் நீங்கா இடம்பிடிப்பார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஸ்திரமான அரசு... (03ஆம் பக்கத் தொடர்)

தீர்வு காணும் வகையில் சர்வதேசத்தின் உதவிகளை பெற்றுக்கொள்ள வேண்டுமானால் ஸ்திரமான அரசாங்கம் அமைப்பது அவசியம் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாட்டு செய்தி சேவைக்கு அவர் நாட்டின் தற்போதைய நிலை தொடர்பில் வழங்கியுள்ள கருத்துக்களின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டுமானால் ஸ்திதமான அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும் என்பதையும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி மாளிகை... (03ஆம் பக்கத் தொடர்)

அனுமதிக்கப்பட்டுள்ளதாக தொல்பொருள் திணைக்களம் தெரிவித்தது. ஜனாதிபதி மாளிகையில் இருந்த பிரித்தானிய காலத்தை சேர்ந்த தொல்பொருள் பெறுமதிவாய்ந்த பல ஓவியங்கள் பாதுகாப்பாக அகற்றப்பட்டுள்ளதாக தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

## கொரோனா தொற்று... (03ஆம் பக்கத் தொடர்)

புதிதாக இனங்காணப்பட்டுள்ளதுடன் ஒருவர் மரணித்துள்ளதாகவும் அந்த பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க ஆஸ்பத்திரிகளிலும் வீடுகளிலும் தற்போது 393 தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## எதிர்க்கட்சி தலைவரை... (03ஆம் பக்கத் தொடர்)

20ஆம் திகதி புதிய ஜனாதிபதி தெரிவிற்கான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

புதிய ஜனாதிபதி தெரிவினை தொடர்ந்து பிரதமர் மற்றும் அவர் தலைமையிலான அரசாங்கம் குறித்து அவதானம் செலுத்தப்படும்.

அரசாங்கம் ஒன்று இல்லாத பட்சத்தில் எதிர்க்கட்சி தலைவர் தலைமையிலான அரசாங்கத்தை ஸ்தாபிப்பது அரசியல் செயலொழுங்காக காணப்படுகிறது.

அதற்கமைய எதிர்க்கட்சி தலைவர் தலைமையில் புதிய அரசாங்கம் தோற்றம் பெற வேண்டும் என்பது எமது நிலைப்பாடாகும். இவ்விடயத்தில் நபர் முக்கியமல்ல, எதிர்க்கட்சி தலைவர் பதவி தான் முக்கியமானது. அதற்கமைய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ பிரதமராக நியமிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம்.

கட்சி தலைவர் கூட்டத்தில் பெரும்பாலான தரப்பினர் இதனையே வலியுறுத்தியுள்ளார்கள்.பல்வேறு மாற்றுக்கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தற்போதைய நிலைமையில் வெகுவிரைவில் அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காண்பது அவசியமானது.

நெருக்கடியான சூழ்நிலையை கருத்திற்கொண்டு சகல அரசியல் கட்சிகளும் பொது இணக்கப்பாட்டுடன் செயற்பட வேண்டும் என்றார்.

## சீனாவிடம் இருந்து 04 பில்...

பெற்றுக்கொண்ட கடனை திருப்பி செலுத்த ஒரு பில்லியன் டொலரும், 1.5 பில்லியன் பெறுமதியான கடன் பரிமாற்ற வசதி மற்றும் சீனாவிடமிருந்து பொருட்களை இறக்குமதி செய்வதற்காக 1.5 பில்லியன் ரூபா கடன் எல்லை வசதி என இலங்கையினால் சீனாவிடம் கடனுதவி கோரப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## புதிய ஜனாதிபதி ...

செயலாளர் இசுரு பாலபட்டபெந்தி ஆகியோர் கையெழுத்திட்டு விடுத்த அறிக்கையில் இவ்வாறு கோரப்பட்டுள்ளது. அரச வளாகங்களிலிருந்து போராட்டக்காரர்கள் வெளியேறியுள்ளதை தான் வரவேற்பதாகவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

## அனைத்து பாடசாலைகளுக்கும்...

திறக்கப்படும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் எதிர்கொள்ளநேர்ந்துள்ளபோக்குவரத்து தொடர்பான அசௌகரியங்களை கவனத்திற் கொண்டே கல்வியமைச்சு மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளது.

கல்வி அமைச்சில் நேற்று அமைச்சின் செயலாளர் தலைமையில் விசேட கூட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது. அந்தக் கூட்டத்துக்கு மாகாண கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டுக்கமையவே எதிர்வரும் 21 ஆம் திகதி மீண்டும் பாடசாலைகளை கல்வி நடவடிக்கைகளுக்காக திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## போராட்டம் என்ற பெயரில்... (03ஆம் பக்கத் தொடர்)

ஒரு ஊடகத்தின் உள்ளடக்கத்தைத் தீர்மானிப்பது அந்ததந்த ஊடகத்தின் ஆசிரியர் குழுவின் உரிமையாகும், அதில் செல்வாக்கு செலுத்துவது ஊடக சுதந்திரத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுகோல்களின்படி ஊடக சுதந்திரத்தை தெளிவாக மீறும் செயற்பாடாகும்.

தேசிய தொலைக்காட்சி உள்ளிட்ட அரச ஊடகங்கள் தற்போதுள்ள அரசாங்கங்களின் ஊதுகுழலாகச் செயற்படுவதற்கு மாற்றீடாக 'பொதுச் சேவை ஊடகமாக' மாற வேண்டும் எனச் சுதந்திர ஊடக இயக்கம் உள்ளிட்ட ஊடக சமூகம் சுமார் இரண்டு தசாப்தங்களாகக் கூறி வருகின்றது.அரச ஊடகம் மற்றும் பொதுமக்களின் சொத்தான அதிர்வெண்ணை (frequencies) பயன்படுத்தும் ஊடகம் உட்பட அனைத்து ஊடக நியமங்களுக்கும் சுயாதீன ஊடக ஆணையகம் நிறுவப்பட வேண்டும் என்ற கருத்தை ஊக்குவித்து வருகின்றது. மேலும், கருத்து சுதந்திரம் உள்ளிட்ட ஊடக சுதந்திரம் ஜனநாயக சமூகத்தின் அடிப்படை நிபந்தனை என்பதை அங்கீகரிக்கும் சுதந்திர ஊடக இயக்கம், தமது கருப்பொருளில் கூறப்பட்டுள்ளபடி 'சுதந்திர பொறுப்பின் நீட்சி' என்பதை பயன்படுத்துமாறு தொடர்ந்து வலியுறுத்துகிறது. அந்த வகையில், நாட்டையே திவாலாக்கிய ஆட்சிக்கு எதிராக முன்னெப்போதும் இல்லாத வகையில் மக்கள் எழுச்சி ஏற்பட்டுள்ள இவ்வேளையில், தேசிய தொலைக்காட்சி உள்ளிட்ட அரச ஊடகங்கள் ஆட்சியைப் பாதுகாத்து மக்கள் எழுச்சிக்கு எதிராகச் செயற்படுவதை சுதந்திர ஊடக இயக்கம் எவ்வகையிலும் அங்கீகரிக்கவில்லை. மேலும், தற்போதுள்ள அரசாங்கத்திற்கு விசுவாசமாகவும் அதற்கு எதிராகவும் செயற்படும் சில தனியார் தொலைக்காட்சிகளின் செயற்பாடுகள் தொடர்பிலும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கடுமையான விமர்சனங்கள் காணப்படுகின்றன.

இருந்தபோதிலும், ஊடக சமூகம், பொதுமக்கள் மற்றும் அரசாங்கத்துக்கு இடையில் பரந்த உரையாடல் மற்றும் உடன்படிக்கையினூடாக ஊடகச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று உறுதியாக நம்புகின்ற சுதந்திர ஊடக இயக்கம், இது தொடர்பில் நீண்டகாலமாகக் கூட்டு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது. மேலும் எந்தவித தரப்பினரும் ஊடக நிறுவனத்திற்கு பலவந்தமாக உட்புகுந்து கட்டளைகள் இடுவதனால் சிறந்ததொரு மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என்பதே எமது நம்பிக்கையாகும். எந்தவொரு தரப்பினரிடமிருந்தும் இத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகளானது ஊடக சுதந்திரத்திற்கும் ஜனநாயகத்திற்கும் அச்சுறுத்தலாகக் கருதும் சுதந்திர ஊடக இயக்கம் இச் செயற்பாட்டை வன்மையாகக் கண்டிக்கின்றது.

போராட்டக்காரர்கள் என்று அடையாளப்படுத்திக்கொண்ட இருவர் வளாகத்திற்குள் கட்டளையிட்டுக்கொண்டு நடந்து கொண்ட விதம் மற்றும்நேரடி ஒளிபரப்பின் போது தெரிவித்த சில கருத்துக்கள் நாகரீக சமூகத்தை அதிர்ச்சியடையச் செய்வதாக சுதந்திர ஊடக இயக்கம் கூறத் தயங்கவில்லை. "ஊடக நெறிமுறைகளை நாம் ஏற்கவில்லை" என்று கருத்து தெரிவித்தவரின் ஒருவர் எவ்வித ஒளிவு மறைவுகளுமின்றி அவ்வாறே குறிப்பிட்டார். மேலும் அவர்கள் நேரடியாகவே "கோரிக்கைகளை அல்ல உத்தரவுகளையே வழங்குகிறோம்" என்றும் குறிப்பிட்டனர். இந்த நடத்தை பிரபல அமைச்சரான மர்வின் சில்வா ஒரு கும்பலுடன் தொலைக்காட்சி வளாகத்திற்குள் நுழைந்ததை நினைவூட்டுகிறது.

கருத்து தெரிவிக்கும் உரிமை, அனைத்து உரிமைகளுக்கும் அடிப்படை என்பதை வலியுறுத்தும் சுதந்திர ஊடக இயக்கம், போராட்டம் என்ற பெயரில் நடக்கும் இத்தகைய செயல்களைக் கண்டிப்பதுடன் அதனை விவாதத்திற்கு உள்ளாக்குவதன் ஊடாக அனுபவமற்ற போராட்டக்காரர்களுக்குரிய புரிதலைப் பெற்றுக்கொடுப்பது அறிவார்ந்த சமூகத்தின் பொறுப்பு என்பதை வலியுறுத்துகிறது. எவ்வளவு சவாலான சூழ்நிலையை எதிர்கொண்டாலும் போராட்டத்தின் இவ்வாறான குணாதிசயங்களைப் பாதுகாத்து செயல்படுமாறு 'அன்பின் போராட்டம்' என்ற மேம்பட்ட கலாசார எதிர்ப்பு தெரிவிக்கும் முறைக்குப் பங்களித்த அனைத்து தரப்பினரிடமும் நாம் சகோதரத்துவ வாஞ்சையுடன் வேண்டிக்கொள்கின்றோமென்றும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## கோட்டாபய ராஜபக்ஷ வெளியேறியதில்...

அபிலாஷைகளை நனவாக்க முற்படும்போது இந்தியா அவர்களுடன் தொடர்ந்திருக்கும் என்றும் இதன்போது தெளிவுப்படுத்தியுள்ளார்.

இந்த ஆண்டு மட்டும் 3.8 பில்லியன் டொலர் உதவியை, இந்தியா, இலங்கைக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கை ஒரு முக்கியமான அண்டை நாடு என்றும், அங்கு உருவாகி வரும் சூழ்நிலையை இந்தியா உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் தெரிவித்த அவர், இலங்கையில் தொடர்புடைய அனைத்து பங்குதாரர்களுடனும் புதுடெல்லி தொடர்ந்து தொடர்பில் இருந்து வருவதாகவும் தெரிவித்தார்.

## மின்சார கட்டண திருத்த...

குறித்த பொதுப் பயன்பாட்டு ஆணையத்தின் பரிந்துரைகள் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் முன், பொதுமக்களின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன.

## மஹிந்த பசில் வெளிநாடு செல்ல...

உத்தரவு பிறப்பித்துள்ளது. எதிர்வரும் 28 ஆம் திகதி வரை அமுலாகும் வகையில் இந்த இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்களுக்கு எதிராக விசாரணை நடத்துமாறு கோரிய மனு தொடர்பான நகர்த்தல் பத்திரம் தொடர்பில் நேற்று (15) இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, புவனேக அலுவிஹாரே, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட மற்றும் எல்.டி.பி தெஹிதெனிய ஆகிய ஐவரடங்கிய உயர் நீதியரசர்கள் ஆயம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

## பெற்றோலை வாய்மூலமாக....

சிகிச்சை பெற்று வந்த அவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிட்டபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வேறு நோய்கள் இல்லாத, புகைப்பழக்கமற்ற 30 வயதான இந் நபரின் நுரையீரலுக்கு எவ்வாறு பாதிப்பு ஏற்பட்டது என்பது குறித்து தாம் ஆச்சரியமடைந்ததாக வைத்தியர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு சில காரணங்கள் உள்ளன. அண்மைக் காலமாக பெற்றோல் வரிசையில் காத்திருந்த அவர், சரியாக உணவு உட்கொண்டாரா என்பதில் சந்தேகம் உள்ளது. மழையிலும், வெயிலிலும் அவர் வரிசையில் காத்திருந்துள்ளார்.

அத்துடன், ஒரு வாகனத்திலிருந்து இன்னுமொரு வாகனத்துக்காக, வாய்மூலம் எரிபொருளைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அவரின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த அனைத்து காரணங்களினால், அவரின் நுரையீரல் பாதிக்கப்பட்டிருக்கும். தற்போதைய காலத்தில் பாதுகாப்பாக இருப்பது மிக முக்கியமானதாகும்.

பெற்றோலிலுள்ள இரசாயனத்தினால், நுரையீரல் பாதிக்கப்படலாம். சிறு பற்றீரியா அல்லது வைரஸ் உடலினுள் சென்றால், உடலில் நோயெதிர்ப்பு சக்தி குறைவடையும்போது, இதுபோன்ற நிலைமை ஏற்படலாமென வைத்தியர் கபிலானி வித்தானாராச்சி தெரிவித்துள்ளார்.

## ஜனநாயக முறையில்...

ஆட்சிக்கு மதிப்பளிப்பது முக்கியமானது. அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையைக் கட்டியெழுப்புவதற்கும், அனைத்து மக்களின் தேவைகளுக்கும் சேவை செய்வதற்கும் அனைத்துக் கட்சிகளும் விரைவாக ஒன்றிணைந்து செயல்படுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## ரஷ்ய விமான வழக்கு நேற்று...

ஜூன் மாதம் (28) கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் ஊடாக மனுவொன்றை தாக்கல் செய்தது.

நீதிமன்றத்தை நாடாமல் இந்த தடை உத்தரவு பெறப்பட்டதாக சட்டமா அதிபர் உள்ளிட்ட தரப்பினர் முன்வைத்த உண்மைத் தன்மைகளை கருத்திற்கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## A/L பரீட்சை பெறுபேறுகள்...

பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் 28ஆம் திகதி முதல் டிசம்பர் 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி தர்மசேன தெரிவித்துள்ளார்.

ஜூலை 18ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 19ஆம் திகதி வரை இதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஜனாதிபதி வெற்றிடம் குறித்து...

செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவித்துள்ளார்.

1981ஆம் ஆண்டு 02ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆவது சரத்துக்கமைய ஜனாதிபதி பதவியில் வெற்றிடம் ஏற்பட்டு மூன்று நாட்களுக்குள் பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டும். இதற்கமைய இச்சட்டத்தின் 05ஆவது சரத்துக்கமைய ஜனாதிபதியின் பதவியில் ஏற்பட்டிருக்கும் வெற்றிடம் குறித்து செயலாளர் நாயகம் இன்று (16) பாராளுமன்றத்தில் அறிவிக்கவுள்ளார்.

அதேநேரம், கட்சித் தலைவர்களால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதற்கமைய எதிர்வரும் 20ஆம் திகதி புதிய ஜனாதிபதி பாராளுமன்றத்தினூடாகத் தெரிவுசெய்வது இடம்பெறுமென நேற்று முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்ற கட்சித் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

இதன்படி எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வேட்புமனுக்கள் கோரப்படுமெனவும், அதன் பின்னர் 20ஆம் திகதி புதன்கிழமை பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு ஜனாதிபதி தெரிவுசெய்யப்படுவாரென்றும் சபாநாயகர் குறிப்பிட்டார். ஜனநாயகக் கட்டமைப்புக்குள் சட்ட விதிகளுக்கமைவாக எந்தவொரு தடையுமின்றி இந்த நடவடிக்கைகளைத் துரிதமாக முன்னெடுப்பதற்கு அனைத்துத் தரப்பினரின் ஒத்துழைப்பையும் எதிர்பார்ப்பதாக சபாநாயகர் இங்கு தெரிவித்தார்.

## ஜனாதிபதி கோட்டாபயவின் இராஜினாமாவை...

புதிய ஜனாதிபதி ஒருவரை நியமிப்பதற்கான செயன்முறை இன்னும் 07 தினங்களில் முன்னெடுக்கப்படுமென தெரிவித்த சபாநாயகர், அதுவரை பதில் ஜனாதிபதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடமைகளை பொறுப்பேற்பாரென்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

அத்துடன் இன்று16 ஆம் திகதி சனிக்கிழமை பாராளுமன்றம் கூடவுள்ளதுடன் அனைத்து உறுப்பினர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு சபாநாயகர் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன விடுத்துள்ளஅறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 38.1 (ஆ) பிரிவுக்கமைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள இராஜினாமா கடிதம் எனக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

அதற்கமைய, நேற்று முன்தினம் 14ஆம் திகதி முதல் ஜனாதிபதி தனது பதவியிலிருந்து உத்தியோகபூர்வமாக இராஜினாமா செய்துள்ளார். அதற்கமைய தற்பொழுது முதல் புதிய ஜனாதிபதியை நியமிக்கும் அரசியலமைப்பு செயன்முறை நடைமுறைக்கு வரும். அந்த செயன்முறை நிறைவுறும் வரை ஜனாதிபதி பதவியின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும் அரசியலமைப்பின் பிரகாரம் பிரதமர் நடவடிக்கை எடுப்பார்.

என்னால் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது போன்று புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்வது, 1981ஆம் ஆண்டு 02ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்துக்கமைய மற்றும் அரசியலமைப்பின் 40ஆவது பிரிவுக்கமைய இடம்பெறும். இந்த செயன்முறையை மிக விரைவில் வெற்றிகரமாக நிறைவேற்றுவது எனது நோக்கமாகும். தெற்காசியாவின் பழைமையான ஜனநாயக நாடாக பெருமைப்படும் எமது நாட்டில் இந்தசெயன்முறை முழுமையான ஜனநாயகக் கட்டமைப்பிலும் வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்வது எமது நாட்டுக்கு மாத்திரமல்லாமல் உலக அரசியல் வரலாற்றிலும் முக்கியமான வரலாற்று நிகழ்வாக அமையும்.

அதனால், இந்த ஜனநாயக செயற்பாட்டுக்கு முழுமையான ஆதரவை வழங்குமாறு அனைத்துக் கட்சித் தலைவர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பாதுகாப்புத் தரப்பு அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்கிறேன். உரிய ஜனநாயக பாராளுமன்ற முறைமையை செயற்படுத்துவதற்கு பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து உறுப்பினர்களுக்கும் சுயாதீனமாக தமது மனச்சாட்சிப்படி செயற்படுவதற்கும் அமர்வில் கலந்துகொள்வதற்கும் பொருத்தமான அமைதியான சூழலை ஏற்படுத்தித் தருமாறு விசேடமாக எமது நாட்டின் அன்பான மக்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

அவ்வாறான அமைதியான சூழ்நிலையில் பொறுப்பு வாய்ந்தவர்களின் ஆதரவுடன் ஏழு குறுகிய நாட்களுக்குள் இந்த செயன்முறையை நிறைவு செய்வதற்கு நான் எதிர்பார்க்கின்றேன். அதற்கமைய 16 ஆம் திகதி சனிக்கிழமை (2022.07.16) பாராளுமன்றம் கூடவுள்ளதுடன் அனைத்து உறுப்பினர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு இத்தால் அறிவிக்கின்றேன் என்றும் சபாநாயகர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## புதன்கிழமை புதிய ஜனாதிபதி...

(விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆவது உறுப்புரையின் பிரகாரம் ஜனாதிபதி பதவி வெற்றிடமாகியதை தொடர்ந்து மூன்று நாட்களுக்குள் பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டும்.

அதற்கமைய 5ஆவது உறுப்புரையின் பிரகாரம் ஜனாதிபதி பதவி வெற்றிடமாகியுள்ளது என்பதை பாராளுமன்ற செயலாளர் நாயகம் பாராளுமன்றத்திற்கு உத்தியோகப்பூர்வமாக அறிவிப்பார். நேற்று இடம்பெற்ற கட்சி தலைவர் கூட்டத்தில் முன்னர் தீர்மானித்ததற்கமைய எதிர்வரும் 20ஆம் திகதி வாக்கெடுப்பின் ஊடாக புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன குறிப்பிட்டுள்ளார். அதற்கமைய எதிர்வரும் 19ஆம் திகதி வேட்பு மனுக்கல் கோரப்பட்டு,எதிர்வரும் 20ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) வாக்கெடுப்பின் ஊடாக புதிய ஜனாதிபதி தெரிவு இடம்பெறும். ஜனநாயக வரைபிற்குள் சபை நடவடிக்கைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தாத வகையில் சகல உறுப்பினர்களும் செயற்பட வேண்டும் என சபாநாயகர் கட்சி தலைவர்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

## அரசியலமைப்பை மீறும் எந்தவொரு...

நெருக்கடியான சூழ்நிலையிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு முன்னுரிமையளிக்குமாறும் அதன் பின்னர் கட்சி அரசியலை மேற்கொள்ளலாமென்றும் தெரிவித்துள்ளார்.

19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான செயற்பாடுகளை மேற்கொள்ளப் போவதாக தெரிவித்துள்ள அவர், புதிதாக ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுபவர் 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான பின்னணியை தமது பதில் ஜனாதிபதி காலத்தில் ஏற்படுத்திக் கொடுக்கப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்கள் தொடர்பில் சிந்தித்தே நான் இந்த பதவியை பொறுப்பேற்றுள்ளேன். நாடு தற்போதுள்ள நெருக்கடி நிலையில் முதலில் நாட்டைக்கட்டியெழுப்புவது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். கட்சி அரசியலில் பின்னர் கவனம் செலுத்தலாம்.

ஜனநாயக ரீதியான போராட்டங்களுக்கு நான் மதிப்பளிக்கின்றேன். எனினும் போராட்டக்காரர்கள் மற்றும் கிளர்ச்சிக்காரர்களென இரண்டு பிரிவினர் நாட்டில் காணப்படுகின்றனர்.

ஜனநாயக ரீதியாக போராட்டம் நடத்துபவர்களுக்கு அதனை அமைதியாக முன்னெடுத்து செல்ல முடியும். எனினும் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

இரண்டு தினங்களுக்கு முன் இடம்பெற்ற சம்பவத்தில் இராணுவத்தினர் இருவர் பாரிய தாக்குதலுக்கு உள்ளகியுள்ளனர். அவர்களிடமிருந்த இரண்டு துப்பாக்கிகளும் அபகரிக்கப்பட்டுள்ளன. இராணுவத்தினர் 24 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர். கிளர்ச்சியாளர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அச்சுறுத்தல் விடுத்து வருகின்றனர்.

எதிர்வரும் 20ஆம் திகதி ஜனாதிபதி தெரிவு நடைபெறவுள்ள நிலையில் அந்த வாக்கெடுப்பு தொடர்பிலும் அவர்கள் அழுத்தம் கொடுத்து வருகின்றனர். பதில் ஜனாதிபதி என்ற வகையில் பாராளுமன்றத்தின் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பிலும் உரிய நடவடிக்கை எடுப்பேன்.

அந்த வகையில் சட்டம், அமைதியைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பது அவசியம். நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக அனைவரும் ஒன்றுபடுவோம் என்றும் பதில் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஜூலை 16
சனிக்கிழமை

தமிழக மீனவர்களுக்கு

# ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை

## உடைமைகள் அரசுடமை

யாழ்.விசேட நிருபர்

யாழ். காரைநகர் மற்றும் நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 11 தமிழக மீனவர்களுக்கும் 18 மாத சிறை தண்டனை விதித்து, அதனை 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைத்து, ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை அவர்களின் இரண்டு படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் என்பன அரசுடமையாக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினம் மீன்பிடி துறை முகத்திலிருந்து மீன்பிடிக்க புறப்பட்ட 11 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைத்து மீன்பிடியில் ஈடுபட்ட போது கடற்படையினரால் கடந்த வாரம் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 11 தமிழக மீனவர்களும் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

அதனையடுத்து நீதவான் 11 மீனவர்களையும் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது 11 மீனவர்களுக்கும் 18 மாத சிறைத்தண்டனை விதித்து அதனை 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைத்ததுடன், அவர்களின் படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை அரசுடமையாக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

# சுகாதாரப் பணியாளர்களுக்கு எரிபொருள் வழங்கலில் ஏமாற்றம்



சாவகச்சேரி விசேட நிருபர்

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று எரிபொருள் பெறுவதற்காக காத்திருந்த சுகாதாரப் பணியாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பியிருந்தனர்.

அதிகாலை தொடக்கம் வரிசையில் காத்திருந்த சுகாதார பணியாளர்களே இவ்வாறு ஏமாற்றத்துடன் திரும்பியிருந்தனர்.

சுகாதாரப் பணியாளர்களுக்கு கடந்த வாரமும் எரிபொருள் விநியோகிக்கப்படாமை குறிப்பிடத்தக்கது.

# கஞ்சா மீட்பு

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம் மண்டைதீவு கடற்கரை பகுதியிலிருந்து 46 கிலோ கஞ்சா கடற்படையினரால் மீட்கப்பட்டது.



கஞ்சா இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்ட சமயம் கடற்படையினரைக் கண்டு, கடத்தல்காரர்கள் கைவிட்டுச் சென்று இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

கைப்பற்றப்பட்ட கஞ்சா ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# பேசாலையில் இரத்த தானம்

(தலைமன்னார் விஷேட நிருபர்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியில் குருதி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி செந்தூர் பதி ராஜா அண்மையில் அவசர கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தார். அதற்கமைவாக நேற்று வெள்ளிக்கிழமை (15.07.2022) காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை பேசாலை பிரதேச வைத்தியசாலையில் இரத்தானம் வழங்கும் முகாம் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இந்த முகாமானது 'வெற்றியின் சிறகுகள்' என்ற ஒரு அமைப்பின் ஆதரவில் 'இரத்ததானம் செய்வோம் இன்னுயிர் காப்போம்' என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# வீதி விபத்தில் அரச கணக்காளர் பலி

யாழ். விசேட நிருபர்



யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கணக்காளர் வீதி விபத்தில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் திருநெல்வேலியை சேர்ந்த கலைமதி செல்லத்துரை (வயது 47) என்பவரே உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் கடந்த 5ஆம் திகதி இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் பட்டா வாகன விபத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இந்நிலையில் நேற்றைய தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

# குருந்தூர் மலையில் அனைத்து புதிய கட்டுமானங்களையும் அகற்றுமாறு முல்லைத்தீவு நீதிமன்றம் அதிரடி உத்தரவு

மாங்குளம் குறூப் நிருபர்

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலை ஆதி சிவன் ஐயனார் ஆலய வளாகத்தில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரை உள்ளிட்ட அனைத்து கட்டுமானங்களையும் அகற்றுமாறு முல்லைத்தீவு நீதிமன்றம் அதிரடி உத்தரவை பிறப்பித்துள்ளது.

கட்டுமானங்களை அகற்றி நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அந்த பகுதியில் ஆதி சிவன் ஐயனார் ஆலயத்தினர் தங்களுடைய வழிபாடுகளை மேற்கொள்வதற்கு எந்த விதத்திலும் தடை விதிக்க கூடாது எனவும் இந்த இடத்தில் அமைதியின்மை ஏற்படாத வகையில் பொலிஸார் உரிய பாதுகாப்பினையும் வழங்க வேண்டும் எனவும் முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

குருந்தூர்மலை தொடர்பான வழக்கு நேற்று நீதிமன்றில் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர் மற்றும் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் இவர்கள் சார்பில் சட்டத்தரணி வி.எஸ்.எஸ் தனஞ்சயன் மற்றும் சட்டத்தரணி கெங்காதரன் முன்னிலையாகியதோடு எதிர்தரப்பிலே பொலிஸார் மன்றில் முன்னிலையாகினர். இதன் போது முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா வழக்கின் தீர்ப்பை நேற்றுமுன்தினம் (14) வழங்கினார்.

குறித்த கட்டளை தொடர்பில் நீதிமன்றத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் மன்றில் முன்னிலையாகிய சட்டத்தரணி தனஞ்சயன் ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தார். முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்திலேயே AR 673/18 என்ற குருந்தூர் மலை தொடர்பான வழக்குக்கான தீர்ப்பு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி. சரவணராஜா ஐயா அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த தீர்ப்பிலே இரு தரப்பு வாதங்களையும் உய்த்தறிந்த நீதிபதி புதிதாக குருந்தூர் மலை பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருக்கின்ற விகாரை, சிலைகள் மற்றும் சுருவங்கள் உள்ளிட்ட அனைத்து கட்டுமானங்களும் அகற்றப்பட வேண்டும் எனவும் கட்டளை ஆக்கி இருக்கின்றார். மேலும் இந்த புதிதாக அமைக்கப்பட்ட கட்டடங்களை அகற்றியதன் பின்னர் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென முல்லைத்தீவு பொலிஷாருக்கு நீதிமன்றம் கட்டளை வழங்கியிருக்கின்றது.

மேலும் குறித்த பகுதியானது தொல்லியல் திணைக்களத்தின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியாக காணப்படுவதால் அந்த பிரதேசம் தொடர்பான விடயங்களை ஆய்வு செய்து அது தொடர்பாக அறிக்கையிடுமாறு தொல்லியல் திணைக்களத்துக்கு அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் இந்த கட்டளையிலே பாரம்பரியமாக முல்லைத்தீவு குருந்தூர் மலையிலே ஆதி சிவன் ஐயனார் ஆலயத்தினர் தாம் செய்து வருகின்ற பூசைவழிபாடு நிகழ்வுகளை எந்த விதத்திலும் யாரும் தடுக்கக் கூடாது என்ற கட்டளையும் தொடர்ந்து அந்த இடத்திலேயே சமாதான குலைவு ஏற்படாத வகையிலே பொலிஸார் தமது பாதுகாப்பை வழங்க வேண்டும் எனவும் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் கட்டளை வழங்கி இருக்கிறது.

என தெரிவித்தார். தமிழர்களின் பூர்வீக வழிபாட்டிடமான முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலையில் கடந்த மாதம் 12 ம் திகதியன்று , 'கபோக்' கல்லினாலான புத்தர் சிலை ஒன்றினை அமைப்பதற்கும், அங்கு நீதிமன்ற கட்டளையை மீறி அமைக்கப்பட்ட விகாரையில் விசேட பௌத்த வழிபாடுகளை மேற்கொள்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதி தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டதைத் தொடர்ந்து அந்த முயற்சிகள் கைவிடப்பட்டிருந்தன.

இந் நிலையில் குருந்தூர் மலை ஆதிசிவன் ஐனார் ஆலய நிர்வாகத்தினர் மற்றும், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோர், 16ம் திகதி குருந்தூர்மலை தொடர்பில் ஏற்கனவே முல்லைத்தீவு நீதவான் நீதி மன்றில் தொடரப்பட்ட வழக்கினை நகர்த்தல் பத்திரம் அணைத்து, ஏற்கனவே நீதிமன்றம் வழங்கிய கட்டளையினை மதிக்காமல் அவமதிப்புச் செய்து, அங்கு அமைக்கப்பட்ட விகாரை தொடர்பிலும், பொலிஸார் தொடர்ச்சியாக இந்த வழக்கிலே நீதிமன்றிற்கு வழங்கவேண்டிய அறிக்கைகளை வழங்காது, சட்டத்தை மீறிச் செயற்படுபவர்களுக்கு சார்பாகச் செயற்பட்டதையும் முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்டத்தரணிகள் அனைவரும் இணைந்து மன்றில் நீதவானின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

இரண்டு தரப்பு வாதங்கள் சமர்ப்பணங்களை அவதானித்த நீதவான், கட்டளைக்காக இந்த வழக்கினை 14.07. 2022 தினத்துக்கு திகதியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அஸ்தியை கரைக்க சென்றவர் நீரில் மூழ்கி பலி

நாகர்கோவில் விஷேட நிருபர்)

இறந்தவரின் அஸ்தியை கரைப்பதற்கு தொண்டைமானாறு ஆற்றுக்குச் சென்றவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் பூந்தோட்டம், வவுனியாவை சேர்ந்த செல்லையா நாகரத்தினம் (வயது 68) என்பவராவார்.

கரவெட்டி கிழக்கு பகுதியில் இடம்பெற்ற மரண சடங்கு ஒன்றுக்கு வந்த அவர் இறந்தவரின் அஸ்தியை கரைப்பதற்காக நேற்று முன்தினம் வியாழக்கிழமை (14) மாலை வேறு சிலருடன் தொண்டைமானாறு ஆற்றில் அஸ்தியை கரைத்ததன் பிற்பாடு உறவினர்களுடன் கேணியில் நீராடினர். இதன்போது சடலம் ஒன்று மிதப்பதைக் கண்ட உறவினர்கள் அதனை மீட்டபோதே தம்முடன் வந்தவரென தெரியவந்தது. இதனையடுத்து முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு ஊறணி வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற போது அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக வைத்தியரால் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை ஆதாரவைத்திய சாலையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. நேற்று வெள்ளிக்கிழமை(15) வைத்தியசாலைக்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார்.

# விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(நாகர்கோவில் விஷேட நிருபர்)

வடமராட்சி கிழக்கு மணற்காட்டுச் சந்திப்பகுதியில் இடம் பெற்ற விபத்தில் படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை (14) பிற்பகல் மருதங்கேணி பருத்தித்துறை வீதியில் பயணித்த ஹயஸ் ரக வாகனமும் துவிச்சக்கர வண்டியுமே இவ்வாறு மணற்காட்டு சந்திப் பகுதியில் மோதி விபத்துக்குள்ளானது.

இதனால் படுகாயமடைந்த குடத்தனை வடக்கைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான பூலோகசிங்கம் விஸ்வமூர்த்தி (வயது33) என்பவர் ஆபத்தான நிலையில் பருத்தித் துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். பின்னர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வாகன சாரதியைக் கைது செய்த பருத்தித்துறை பொலிஸார் நேற்று வெள்ளிக்கிழமை (15) பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் கிருஷாந்த் பொன்னுத்துரை முன்னிலையில் ஆஜர்படுத்திய போது சந்தேகநபரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார் .

# சட்டவிரோத மணல், மரங்கள் கடத்தல்; பொலிஸார் உடந்தை

முல்லைத்தீவு குறூப் நிருபர்

முல்லைத்தீவு ஐயன்கன்குளம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் அனைத்து பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடமாற்றம் வழங்குமாறு பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

அனைவரையும் இடமாற்றம் செய்வதற்கு கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதி பொலிஸ் மா அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக ஐயன்கன்குளம், பழையமுறிகண்டி, புத்துவெட்டுவான் ஆகிய கிராமங்களிலிருந்து தொடர்ச்சியாக மணல், மரங்கள் கடத்தப்படுகின்றன. கொக்காவில் வீதி வழியாகவே இவை கடத்தப்படுகின்றன. புத்துவெட்டுவான் கிராம அலுவலர் பிரிவின் இறுதியில் கொக்காவில் பகுதிக்கு அண்மையாக பொலிஸ் இராணுவம் இணைந்த காவலரண் ஒன்றினை அமைப்பதன் மூலம் சகல கடத்தல்களையும் தடுக்க முடியும் என கடந்த ஐந்தாண்டுகளுக்கு மேலாக கிராம மட்ட கூட்டங்களில் வலியுறுத்தப்பட்ட போதிலும் காவலரண் அமைக்கப்படவில்லை.

மாறாக கடத்தல்காரர்களுடன் ஐயன்கன்குளம் பொலிஸ் தொடர்புகளை பேணுவதன் காரணமாக குற்றச் செயல்கள் கடத்தல்கள் கூடுதலாக இடம் பெறுவதாக எண்ணுகின்றோம்.

இந்நிலையில் ஐயன்கன் குளம் பொலிஸாரை முழுமையாக இடமாற்றம் செய்யவும். கொக்காவில் அண்மித்த பகுதியில் காவலரண் ஒன்றினை அமைப்பதன் மூலம் கடத்தல்களை கட்டுப்படுத்த முடியும். இதற்கான நடவடிக்கைகளை பிரதி பொலிஸ் மா அதிபர் எடுக்க வேண்டும். கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மேற்படி கிராமங்களில் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டதன் காரணமாக பெரும் பாதிப்புகளை கிராமங்கள் எதிர்கொண்டுள்ளன.

குளங்களுக்கு அருகில் மணல் அகழ்வுகள் நடைபெறுவதன் காரணமாக மழை காலங்களில் குளங்கள் உடைப்பெடுக்கக் கூடிய அபாய நிலை காணப்படுகின்றது. பெருமளவில் மரங்கள் அழிக்கப்படுவதன் காரணமாக எதிர்காலத்தில் விவசாய முயற்சிகள் முழுமையாக பாதிக்கப்படுகின்ற நிலைமை உருவாகும் எனவும் கிராமங்களின் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# சதுரங்க போட்டியில் மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை சாதனை

மன்னார் குறூப் நிருபர்



இலங்கை பாடசாலைகள் சதுரங்க சங்கம் நடாத்திய மன்னார் மாவட்டத்திற்கான சதுரங்க போட்டியில் அருட்சகோதரர் ரெஜினோல்ட் தலைமையிலான மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையை சேர்ந்த ஐந்து மாணவர்கள் சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

2022 ஆண்டுக்கான மாவட்ட ரீதியான சதுரங்க போட்டி மன்/புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையில் நடைபெற்றது. இப்போட்டியில் மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையை சேர்ந்த கொட்வின்(under9) பிரிவிலும் அபிஷெக் (under15) பிரிவிலும் டனியெஸ்(under17) பிரிவிலும் சார்லஸ் (under17) பிரிவிலும் நிமெஸ்(under20) பிரிவிலும் Champions ஆக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதே நேரம் மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையை சேர்ந்த 17 மாணவர்கள் தேசிய மட்ட போட்டிக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.





வரலாற்றுப் பிரசித்தி பெற்ற சம்மாந்துறை கோரக்கோயில் அகோர மாரியம்மன் ஆலய வருடாந்த தீ மிதிப்பு வைபவம் புதன்கிழமை (13) சிறப்பாக நடைபெற்ற போது... படங்கள் காரைதீவு குறூப் நிருபர்

# மக்களின் நேர்மறையான கருத்துக்களுக்கு செவிசாய்த்து தீர்வை எட்ட வேண்டும்

## சிறிலங்கா நிருவாக சேவைச் சங்கம்

ஒலுவில் விசேட நிருபர்

கட்சி சார்பற்ற மக்கள் போராட்டம் தொடர்பான பொதுமக்களின் நேர்மறையான கருத்துக்களுக்கு செவிசாய்த்து, சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாக்கும் அதே வேளையில் தற்போதுள்ள அரசியலமைப்பின் சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளக்கூடிய விரைவான தீர்வை எட்டுவது இன்றியமையாததாகுமென, சிறிலங்கா நிருவாக சேவைச் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக சிறி லங்கா நிருவாக சேவைச் சங்கத்தினால் வியாழக்கிழமை (14) வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கட்சி சார்பற்ற மக்கள் போராட்டம் குறித்த பெரும்பான்மை மக்களின் கருத்தை மக்கள் பிரதிநிதிகள் செவிமடுத்து அதற்கான தீர்வுகளை பாராளுமன்றம் மூலம் உடனடியாக வழங்க வேண்டும்.

சட்டத்தின் ஆட்சி மற்றும் சமூக நீதியை நிலைநாட்டப் போராடும் கட்சி சார்பற்ற ஆர்வலர்களும் தற்போதுள்ள சட்டக் கட்டமைப்பிற்குள் தங்கள் கோரிக்கைகளை வென்றெடுக்க பாடுபட வேண்டும்.

பொது மக்களுக்கு சொந்தமான அரசு சொத்துகளை உடனடியாக அந்தந்த அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்களிடம் முறையாக ஒப்படைத்து, மேலும் பொது அல்லது தனியார் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுவதையும் தவிர்க்க வேண்டும். இதுவரை அகிம்சை வழியில் நடத்தப்பட்ட கட்சி சார்பற்ற மக்கள் போராட்டத்தில் பல்வேறு நோக்கங்களை கொண்டவர்களும், குழுக்களும் இணைந்திருப்பதாகத் தோன்றுவதால், இதை அவர்களின் தனிப்பட்ட குறுகிய இலக்குகளை நிறைவேற்றும் களமாகப் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது.

ஜனநாயக கட்டமைப்பிற்குள் சட்டத்தின் ஆட்சியினடிப்படையில் கட்சி சார்பற்ற மக்கள் போராட்டத்தின் நற் குறிக்கோளிற்கு இலங்கை நிர்வாக சேவைகள் சங்கத்தின் ஆதரவு தொடர்ந்து இருக்குமெனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## ஒலுவில் துறைமுகத்தில் அம்பாறை

# மாவட்ட மீனவர்களுக்கு எரிபொருள் வழங்கல்

ஒலுவில் விசேட நிருபர்

அம்பாறை மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு ஒலுவில் துறைமுகத்திலுள்ள எரிபொருள் கொள்கலனிலிருந்து எரிபொருள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, கடற்றொழில் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் என். சிறிரஞ்ஞன் தெரிவித்தார்.

கல்முனை சாய்ந்தமருது, நிந்தவூர், ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பொத்துவில் ஆகிய பிரதேசங்களில் உள்ள கடற்றொழிலாளர்கள் தமது தொழிலை மேற்கொள்வதற்கு எரிபொருள் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடற்றொழிலாளர்களுக்கான எரிபொருளை இலகுவான முறையில் பெற்றுக் கொடுப்பதற்கு ஒலுவில் துறைமுகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள எரிபொருள் கொள்கலனைத் திருத்தி அதனூடாக எரிபொருள் வழங்குதற்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆழ் கடல் மீன்பிடித்தொழிலில் ஈடுபடுத்தப்படும் இயந்திரப் படகுகளுக்கு டீசல், மண்ணெண்ணெய் போன்ற எரிபொருள்கள் போதியளவு கிடைக்காமையினால் கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் நின்றே மீன்பிடித் தொழிலுக்கான எரிபொருளை பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. அதுவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வழங்கப்படுவதால் மீனவர்கள் பல சிரமங்களை எதிர்கொள்வதோடு தூர இடங்களுக்குச் சென்று மீன்பிடியில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

மீனவர்கள் விடுத்த கோரிக்கைக்கமைய எரிபொருள் வழங்குவதற்குரிய விசேட ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# அக்கரைப்பற்று விஜயராம விகாரையில் இரத்ததான முகாம்



அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் ஏற்பாட்டில் இவ்வைத்தியசாலையில் நிலவும் இரத்த பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக எசல போயா தினத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று ஸ்ரீ விஜயராம மகா விகாரையில் புதன்கிழமை (13) காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை மாபெரும் இரத்ததான முகாம் நடைபெற்றது.

வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஆஸாத் எம். ஹனீபா தலைமையில் நடைபெற்ற இரத்தான முகாமில் பொலிஸ் உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு இரத்ததானங்களை வழங்கினர்.

# அம்பாறை மாவட்டத்தில் எரிவாயு சிலிண்டர் விநியோகம்; நிந்தவூரில் புதிய நடைமுறை




நிந்தவூர் குறூப் நிருபர்

கடந்த ஒன்றரை மாதத்திற்குப் பின்னர் அம்பாறை மாவட்டத்தில் மீண்டும் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் கடந்த இரண்டு நாட்களாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதில் முதற்கட்டமாக இம்மாவட்டத்தின் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை மற்றும் நிந்தவூர் ஆகிய பிரதேசங்களில் நான்காயிரம் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டதாக, நிந்தவூர் ஓசாகா லங்கா நிறுவன பணிப்பாளர் ஏ. அஸ்வத் கான் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கும் நடைமுறையில், நிந்தவூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராம சேவை பிரிவுகளில் காணப்படும் குடும்பம் ஒன்றுக்கு, ஒரு குடும்ப அட்டை விநியோகிக்கப்பட்டு, அவற்றுக்கு தலா ஒரு சமையல் எரிவாயு சிலிண்டரினைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டதாக நிந்தவூர் பிரதேச செயலாளர் ஏ.அப்துல் லத்தீப் தெரிவித்தார்.

இதில் முதற்கட்டமாக, ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளில் முதலில் 40ற்குள் காணப்படும் வீட்டு முகவரிகளைக் கொண்டவர்களுக்கு எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகவும், இதேபோன்று மீதமாக உள்ள ஒவ்வொரு வீட்டு முகவரிகளுக்கும் இந்த நடைமுறையிலேயே சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கும் நடவடிக்கைகளை தமது பிரதேச செயலகம் முன்னெடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## ஸ்திரமான அரசாங்கத்தில் கிழக்கு தமிழர்களின்

# வகிபாகம் தொடர்பில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தீர்மானம்

வெல்லாவெளி தினகரன் நிருபர்



நாட்டின் எதிர்காலம் தொடர்பாக ஸ்திரமான அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிக்க வேண்டியதன் அவசியம் மற்றும் அத்தகைய அரசியல் அதிகாரத்தில் கிழக்கு மாகாண தமிழர்களின் வகிபாகத்தை உறுதி செய்யும் இலக்கு போன்றவற்றை கருத்தில் கொண்டு கட்சியின் நிலைப்பாடுகள் அமைய வேண்டும் என்று நேற்று கூட்டத்தில் தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்பட்டது.

எதிர்கால அரசியல் தீர்மானங்கள் என்ன? தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உயர்மட்டக்குழு கூடி ஆராய்ப்பட்டுள்ளதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண அரசியல் சூழ்நிலை தொடர்பாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் உயர்மட்ட குழுவினர் நேற்று (15) கட்சியின் தலைமைச் செயலகத்தில் கூடி ஆராயப்பட்டது.

அவர் மேலும் தெரிவிக்கையில்,..

பாராளுமன்றத்தை பிரயோகப்படுத்தும் கட்சிகள் வரிசையில் ஒரு ஆசனத்தைக் கொண்டிருக்கும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியும் இடம்பெறுகின்றது.

அந்த வகையில் எதிர்வரும் ஒரு சில தினங்களில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளும் அவற்றின் பாராளுமன்ற உறுப்பினர்களும் கூடி எடுக்கப் போகின்ற தீர்மானமானது தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கப் போவது நிச்சயமாகும்.

இன்நிலையில் நாட்டின் அதிகார மையங்களான பிரதமர் மற்றும் ஜனாதிபதி பதவிகளின் தேர்வுகள் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகள், அவற்றை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியானது எப்படியான அணுகுமுறையுடன் கையாள வேண்டும்? எப்படியான நிலைப்பாடுகள் எடுக்கப்பட வேண்டும்? என்பது குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இவ் விஷேட கூட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன், தலைவர் பணி குழு உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள், மற்றும் கட்சி முக்கியஸ்தர்கள் கலந்து கலந்து கொண்டனர்.

# நாட்டின் நெருக்கடிக்கு தீர்வு காண்பதென்றால் ரணில் விக்ரமசிங்க பதவி விலக வேண்டும்

தம்பலகாமம் குறூப் நிருபர்



நாட்டின் நெருக்கடிக்கு தீர்வு காண்பதென்றால் ரணில் விக்ரமசிங்க மிக விரைவில் பதவி விலக வேண்டும் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார். கிண்ணியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் (14) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துரைத்த அவர்

நாடு தற்போது மோசமான நிலையை எதிர்நோக்கியுள்ளது. மக்கள் போராட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் போராட்டக்காரர்களை உசுப்பேற்றாமல் இந்த ஆட்சியில் பங்கெடுக்க வேண்டுமானால் சர்வ கட்சியின் முடிவுகளுக்கு இணங்க இணைந்து கொள்ள வேண்டும். அதன் பின் பொதுத் தேர்தல் மூலம் மக்கள் ஆணையை பெற்று ஆட்சியை கைப்பற்ற வேண்டும். மக்கள் போராட்டத்தை உசுப்பேத்தி அராஜகம் மூலமாக ஆட்சியை நிலை நிறுத்த முடியாது.

பாராளுமன்றம் ஊடாக ஜனாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பு வந்தால் அதனை எவ்வாறு எதிர்கொள்வது அது உண்மைத் தன்மையுடன் நடைபெற வேண்டும். இதனை யாவரும் எதிர்பார்க்கிறார்கள், இதற்காக அனைவரும் கைகோர்க்க வேண்டும் இதுவே எங்களது நிலைப்பாடும் எதிர்பார்ப்பும் ஆகும் என்றார்.

# மூதூரில் மான் இறைச்சி வைத்திருந்தவருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதம்

தோப்பூர் குறூப் நிருபர்

திருகோணமலை மூதூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிளிவெட்டி பாரதிபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் சட்டவிரோதமாக மான் இறைச்சியை வைத்திருந்ததற்காக பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மூதூர் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த இரண்டு சந்தேக நபர்களுக்கும் தலா 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து நீதவான் தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இச்சந்தேக நபர்களுள் ஒருவர் மூன்று கிலோகிராம் அறுநூறு கிராம் மான் இறைச்சியையும் மற்றைய சந்தேக நபர் இரண்டு கிலோ கிராம் அறுநூறு கிராம் மான் இறைச்சியையும் தன் உடைமையாக வைத்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சிரதமானப் பணி

மட்டக்களப்பு விசேட நிருபர்

மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் செவ்வாயக்கிழமை (19) கொடியேற்றத்துடன் ஆரம்பமாவதை முன்னிட்டு மட்டக்களப்பு மாநகரசபையினரால் நேற்று (15) சுற்றாடலை துப்பரவு செய்யும் சிரமதானப் பணி இடம்பெற்றது. கொடியேற்றத்தைத் தொடர்ந்து 7 நாட்கள் திருவிழா இடம்பெற்று 8 ஆம் நாள் புதன்கிழமை (27) காலை 6.00 மணிக்கு தேரோட்டமும் மறுநாள் வியாழக்கிழமை (28) நண்பகல் 12.00 மணிக்கு பிதுர்க்கடன் தீர்க்கும் ஆடி அமாவாசை விரத தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

வருடாந்த திருவிழாவையொட்டி மட்டக்களப்பு மாநகரசபையினால் வருடாந்தம் செய்யப்படும் துப்பரவுப் பணியில் ஆலய வளாகம், கடை வீதிகள் அமையவுள்ள வளாகம், தீர்த்தக்குளம் என்பன சுகாதாரப் பகுதி, வேலைப்பகுதி மற்றும் அலுவலக ஊழியர்கள் கலந்து கொண்டு துப்பரவுப் பணியில் ஈடுபட்டனர்.

இப்பணியில் மாநகரமுதல்வர் தி.சரவணபவன், ஆணையாளர் நா.மதிவண்ணன், பிரதி ஆணையாளர் உ.சிவராஜா, மாநகரசபையின் உறுப்பினர்கள், மாமாங்கம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.கிரிசாந்தராஜா மற்றும் சுகாதார மேற்பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்.






# ஹற்றனில் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம்

ஹற்றன் விசேட நிருபர்

ஹற்றன் பகுதிகளில் இரண்டு மாதத்திற்கு பின்னர் நேற்று லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஹற்றன் பகுதியில் கடந்த காலங்களில் சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகத்தின் போது பல்வேறு மோசடிகள் இடம்பெற்றமையினாலும் பலருக்கு அவற்றை பெற்றுக் கொள்ள முடியாது போனது. அம்பகமுவ பிரதேச செயலாளர் சித்தார ரூவனி கமகே தலைமையில் வீட்டு மின்சார பட்டியலுக்கேற்ப கடந்த மேமாதம் டோக்கன்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

முதலாவது தொகுதி கடந்த மே மாதம் வருகை தந்த போதிலும் இரண்டாவது தொகுதி நேற்றைய தினமே விநியோகம் செய்யப்பட்டன.



நேற்றைய தினத்தில் சமையல் எரிவாயு பெற்றுக்கொள்ள வேண்டும் இலக்கங்கள், கடைகளில் பெயர் விபரங்கள் எரிவாயு விற்பனை நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன் இந்த செயற்பாட்டுக்கு உதவுவதற்காக கிராம சேவகர்களும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த டோக்கன் முறைக்கு அமையவே வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தன. இதனால் எரிவாயு விநியோகம் மிகவும் சுமுகமான முறையில் நடைபெற்றதுடன் பெரிதாக நீண்ட வரிசைகளும் காணப்படவில்லை. எரிவாயு பெற்றுக்கொள்வதற்காக தொலைபேசியின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தவர்கள் மாத்திரமே வருகை தந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதே நேரம் கடந்த மூன்று தினங்களாக ஹற்றன் ஐ.ஓ.சி பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கு முன்னால் பெற்றோலுக்காக காத்திருக்கின்றனர்.

இவ்வாறு வரிசையில் காத்திருப்பவர்களுக்கு ஹற்றன் பொலிஸாரால் டோக்கன்கள் வழங்கப்பட்டுள்ளன.

பெற்றோல் பெற்றுக்கொள்வதற்காக எண்ணை நிரப்பு நிலையத்திலிருந்து மல்லியைப்பூ சந்தி வரை முச்சக்கரவண்டி மற்றும் வாகனங்களும், மோட்டார் சைக்கிள்கள் டன்பார் வீதியிலும் நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இராகலையில் திடீர் தீ விபத்து

ஆ.ரமேஸ்



இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மந்திரிதென்ன கிராமத்தில் தனி வீடு ஒன்று தீ விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று (15) அதிகாலை மூன்று மணியளவில் திடீர் தீ விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளதாக இராகலை பொலிஸார் தெரிவித்தனர். மின்சார ஒழுக்கு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இச்சம்பவத்தின் போது தாயுடன் வீட்டில் இரு பிள்ளைகள் என மூவர் மாத்திரம் இருந்துள்ளதாகவும், இவர்களுக்கு எந்தவோர் பாதிப்பும் ஏற்படாமல் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தனர்.

அத்துடன் வீடு தீ பற்றியதை அறிந்து கூச்சலிட்டமையால் சத்தம் கேட்டு சம்பவத்தை அறிந்த அயலவர்கள் விரைந்து வந்து செயற்பட்டமையால் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடிந்தது.

இச்சம்பவத்தினால் வீட்டின் ஒரு பகுதி கூரை மற்றும் படுக்கையறை போன்றவைகளில் தீ பற்றியுள்ளதுடன், ஆடைகள், மற்றும் தளபாடங்களும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

## வருமானச் சான்றிதழ் தாமதத்துக்கு தண்டப்பணமில்லை

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் வாகனங்களுக்கான வருமான

வரிச்சான்றிதழ் பெறும் போது தாமதத்துக்கான தண்டப்பணம் அறவிடுவது இடைநிறுத்தப்பட்டுள்ளது. தாமதமான காலப் பகுதிக்கு தண்டப்பணம் அபகரிக்கப் போவதில்லை என சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் சுனில் ஜயலத் தெரிவித்தார். அறிக்கை ஒன்றை வெளியிடுவதன் மூலம் இந்த அறிவிப்பை அவர் விடுத்துள்ளார். ஜூன் 30 ஆம் திகதி முதல் ஜூலை 29 ஆம் திகதி வரை இரண்டு நாட்களும் உட்பட்ட காலப்பகுதிக்கு இத்தண்டப்பணம் அறவிடப்படாது என அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இக்காலப்பகுதியில் நிலவிய எரிபொருள், போக்குவரத்து மற்றும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக இச்சலுகை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் சடலம் மீட்பு



தலவாக்கலை குறூப் நிருபர்

மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து நேற்று ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவிக்கின்றனர். வட்டகொடை மடக்கும்புர தோட்டத்தைச் சேர்ந்த சுப்பையா சுப்பிரமணியம் (வயது 62) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல தலவாக்கலை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இவரின் மரணம் குறித்து விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நாட்டை கட்டியெழுப்பக்கூடிய அனுபவமுள்ள தலைவர் ரணில்

ஐ.தே.கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார்

பதில் ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்துள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் வாழ்த்துத் தெரிவித்துள்ளதுடன், நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தக்கூடிய ஒரே ஆளுமைமிக்க தலைவர் இவராகும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே நாட்டின் எதிர்காலத்தை கருதி மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கினால் ஒரு நாடாக நாம் மீண்டும் தலை நிமிர்ந்து செயற்பட முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த இரண்டரை ஆண்டுகளாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் அவர் எடுத்திருந்த மோசமான தீர்மானங்களால் பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் நாடு தள்ளப்பட்டுள்ளது.

இதற்கு அவர் உட்பட்ட அவரது ஆட்சியின் பங்காளர்கள் அனைவரும் பொறுப்புக்கூற வேண்டியவர்களாக உள்ளனர்.



தவறான வரி கொள்கை, இரசாயன உரத்தை தடை செய்தமை, இறக்குமதி, ஏற்றுமதிகளுக்கு கட்டுப்பாடு விதித்தமை உட்பட்ட பல்வேறு காரணங்களால் நாட்டின் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டது.

கொரோனா தொற்று பரவலை மாத்திரம் காரணங்காட்டி அவர்கள் தமது பொறுப்புகளில் இருந்து விலகப்பார்த்தனர்.

ஆனால், நாட்டின் அந்நிய கையிருப்பு குறைந்தமையால் எரிபொருள், எரிவாயு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால்தான் மக்கள் புரட்சி வெடித்தது.

ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பொறுப்பேற்ற இரண்டு மாதங்களில் நாட்டின் அந்நியக் கையிருப்பு 1.8 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது. அவர் பொறுப்பேற்கும்போது வெறும் 300 மில்லியன் டொலர்கள் தான் அந்நியக் கையிருப்பு இருந்தது.

எனவே, நாட்டை கட்டியெழுப்பக்கூடிய ஒரே அனுபவமுள்ள தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே.

பதில் ஜனாதிபதியாக அவரது பணிகளை செய்வதற்கு அனைத்துக் கட்சிகளும் பொது மக்களும் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

அவ்வாறு வழங்கினால் நாம் மீண்டும் பொருளாதார ரீதியாக ஸ்திரமான நாடாக முன்னோக்கி பயணிக்க முடியும் என்றும் எஸ்.ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்.

# நோர்வூட் பிரதேச சபை உறுப்பினர் இ.தொ. காவிலிருந்து இடைநிறுத்தம்

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

நோர்வூட் பிரதேச சபையின் இ.தொ.கா உறுப்பினர் சூசை அலக்ஸாண்டர் இ.தொ.காங்கிரஸிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அதன் பொதுசெயலாளர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

எரிவாயு வரிசையில் நிற்ற ஒருவரை அச்சுறுத்தி, தாகாத வார்த்தைகளில் ஏசியதாக சமூக ஊடகங்களில் வீடியோ ஒன்று வைரலாகி வருகின்றது. அதுதொடர்பில் விசாரணைகள் நடைபெற்றுமுடியும் வரை அவர் கட்சியில் இருந்து இடைநிறுத்துவதாகவும் இ.தொ.காவின் பொதுசெயலாளர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

“நோர்வூட் பிரதேச சபை உறுப்பினர் சூசை அலக்ஸாண்டர் மீது எழுந்துள்ள சர்ச்சைகள் மற்றும் குற்றச்சாட்டுகள் தொடர்பில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உயர் மட்ட ஒழுக்காற்று குழு, எதிர்வரும் 21ஆம் திகதி (வியாழக்கிழமை) உரிய விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது.

இதுபோன்ற செயல்களுக்கு இ.தொ.கா ஒருபொழுதும் அனுமதியளிக்காது என்பதோடு பிரதேச சபை உறுப்பினரின் சகல கட்சி உறுப்புரிமைகளும் உடன் அமுலுக்கு வரும் வகையில் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

## மஸ்கெலிய தோட்ட மக்கள் புகார்

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

மஸ்கெலிய பொலிஸ் பிரிவிலுள்ள வறிய குடும்பங்கள் பலவற்றுக்கு நிவாரணப்பொருட்கள் கிடைக்கவில்லையென மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். மஸ்கெலிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹப்புகஸ்தனை தோட்டதிபட்டன் பிரிவிலுள்ள 44 குடும்பங்களைச் சேர்ந்த 102 பேரும் டிக்கோயா டங்கள் தோட்டத்தைச் சேர்ந்த 120 குடும்பங்களைச் சேர்ந்த 312 பேருக்கும் இதுவரை எவரும் பொருட்களை பெற்று கொடுக்க வில்லை என புகார் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட தோட்ட தொழிலாளர்கள் தங்களின் தொழிற்சங்கங்களுக்கு எடுத்து கூறியதுடன் கிராம உத்தியோகத்தரிடமும் இதுதொடர்பில் முறையிட்டுள்ளனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்து இவர்களுக்கு நிவாரணப்பொருட்களை பெற்று தருவதற்கு ஆவணம் செய்ய வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.



நுவரெலியா மாநகர முதல்வர் சந்தனலால் கருணாரட்னவின் விசேட வேண்டுகோளுக்கிணங்க சீனா நாட்டின் நிவாரண உதவியின் கீழ் மாநகரசபையில் சேவையாற்றும் ஊழியர்களுக்கு அண்மையில் உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. இதன் போது நுவரெலியா மாநகரசபை உறுப்பினர்களான ராமையா கேதீஸ், சுசந்த பலியவர்தன, ஜெயராம் சனோஜ், திலினி விக்கிரமசிங்க மற்றும் மாநகரசபை ஆணையாளர் போதிமான, நுவரெலியா மாநகரசபை சுகாதார அதிகாரி சுனில் தெல்பிட்டி உள்ளிட்ட மாநகரசபை உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டு உணவு பொதிகளை வழங்கினர்.

படம்: தலவாக்கலை குறூப் நிருபர்

# கம்பளையில் இந்திய நிவாரணப்பொருட்கள் பகிர்ந்தளிப்பு





கம்பளை நிருபர்

கம்பளை மாவில கணபதி தோட்டத்தில் நேற்று இந்தியா உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டது, கணபதி தோட்டம் ரிவசைட் தோட்டம் மாவில தோட்டம் ஆகிய தோட்ட மக்களுக்கு நேற்று உலர் உணவுப் பொதிகள் வழங்கினர்.

கணபதி தோட்டத்திலுள்ள தேயிலை தொழிற்சாலை முன்பாக நேற்று சமுர்த்தி உத்தியோகஸ்தர் மற்றும் கிராம சேவகர் தலைமையில் இந்த பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து ஒருவருக்கு தலா 10 கிலோ வீதம் அரிசியை பெற்று சென்றனர், சுமார் 270 குடும்பங்களுக்கு இந்த பொருட்கள் வழங்கப்பட்டன, பொருட்களை பெற்ற மக்கள் இந்திய அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்தனர்.

# நகர்வலம்



# அபிவிருத்தி திட்டங்களில் சிவில் பாதுகாப்பு படையினர்

(திறப்பனை தினகரன் அ.புரம் மேற்கு அநுராதபுரம் நிருபர்கள்)



சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் அநுராதபுரம் படையின் உப பிராந்தியங்களாக செயற்படும் மதவச்சி பெரிமியன்குளம் உப பிராந்தியம் மற்றும் மருதன்மடுவ உப பிரதேசத்தில் உள்ள சிவில் பாதுகாப்பு படையினர் பல்வேறு வகையான அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தமது கடமைச் சூழலுக்குள் நாட்டிற்கு ஓரளவு வருமானத்தை ஈட்டித் தரக்கூடியவர்கள் என கருதப்படுகின்றனர். பலாப்பழங்களை உலர்த்துவதன் மூலம் பல்வேறு வகையான உணவுகள் தயாரித்தல், இவற்றை தரப்படுத்தப்பட்ட முறையில் உலர்த்துதல், வீட்டுத் தோட்டங்களை பராமரித்தல், பெரிய அளவிலான பயிர்ச்செய்கை நடவடிக்கை போன்றவை மிகவும் வெற்றிகரமாக இவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அநுராதபுரம் படைத் தளபதி கேணல் ஹர்ஷ பிரேமச்சந்திரவின் பணிப்புரையின் கீழ் நடை முறைப் படுத்தப்படும் இந்த வேலைத்திட்டங்களுக்கு பாதுகாப்புப் படையின் பணிப்பாளர் நாயகத்தின் ஆதரவைப் பெற்று வருவதாக இவர்கள் தெரிவித்தனர்.

இத்தோட்டங்களில் தென்னை, பப்பாளி, கொய்யா போன்றவை பெரிய அளவில் செய்கை பண்ணப் பட்டுள்ளன. பப்பாளி சாகுபடியில் கடந்த சில மாதங்களில் மட்டும் 20 லட்சத்துக்கும் அதிகமான வருவாய் கிடைக்கப் பெற்றுள்ளது.

சிவில் பாதுகாப்பு படையினரால் இலகுவாக செய்யக்கூடிய பணி என்பதனை சுட்டிக்காட்டும் வகையில், உலர்த்தும் திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக பெரியகுளம் உப வலய சிரேஷ்ட கட்டுப்பாட்டாளர் ஜி.அபேரத்ன தெரிவித்தார். இதுதவிர பெரியகுளம் கோட்டங்களில் அரிசி மற்றும் பல்வேறு தானியங்களை பொட்டலம் செய்து தள்ளுபடி விலையில் விற்பனை செய்யும் திட்டத்தையும் இவர்கள் தொடங்கியுள்ளனர்.

அங்குள்ள வீரர்களின் அர்ப்பணிப்பினால் மிகவும் வெற்றிகரமாக கொய்யா, திப்பட்டு, வாழை, பப்பாளி, போன்ற பயிர்கள் மிகுந்த சிரமத்துடன் தண்ணீர் கிடைப்பதில் உள்ள சிரமங்களை சமாளித்து வெற்றிகரமாக சாகுபடி செய்து வருகின்றனர்.

தோட்டங்களை முறையாக பராமரிக்கும் போது சேதன பசளை இங்கு பயன் படுத்தப்பட்டுள்ளதோடு, இரவு பகலாக பாதுகாப்பு பணியில் இருக்கும் இந்த சிவில் பாதுகாப்பு படையினரின் அர்ப்பணிப்பால், விலங்குகளால் பயிர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# ரயிலில் மோதி ஒருவர் பலி

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

புத்தளம் கொழும்பு ரயில் வீதியின் மதுரங்குளி செம்பட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் (14) இரவு ரயிலுடன் ஒருவர் மோதுண்டு மரணமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து புத்தளம் நோக்கி வந்த பயணிகள் ரயிலுடன் இவர் மோதுண்டு உயிரிழந்து இருக்கலாம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த நபர், நிக்கவெரட்டி ரஸ்நாயக்கபுர பகுதியைச் சேர்ந்த 50 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவ்வாறு உயிரிழந்த நபர் எதற்காக மதுரங்குளி பகுதிக்கு வருகை தந்தார். எவ்வாறு ரயிலுடன் மோதுண்டு உயிரிழந்தார் என்பது தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் நீதிவான் விசாரணையின் பின்னர், பிரதே பரிசோதனைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சமுர்த்தி உத்தியோகத்தர்களின் பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

புத்தளம் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் முன்னெடுத்து வந்த தொடர் பணிபகிஷ்கரிப்பு போராட்டம் மூன்று நாட்களின் பின்னர் (13) நிறைவுக்கு வந்துள்ளது.கடந்த (06) பொதுநிருவாக அமைச்சு வெளியிட்ட சுற்றுநிருபத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும், தமக்கு தேவையான எரிபொருள் வழங்க கோரியுமே சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மேற்படி பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

அத்தியாவசிய சேவைகளை முன்னெடுத்து வரும் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எரிபொருள் இன்றி சிரமங்களை எதிர் நோக்குவதாகவும், இதனால் அவர்களுக்கு தேவையான எரிபொருளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு கோரி கடந்த 6 ஆம் திகதி பொதுநிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும், பிரதேச செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார். இதற்கு தமது எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய, நடு முழுவதும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கடந்த திங்கட்கிழமை (11) முதல் தொடர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையை கவனத்தில் கொள்ளாமல் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக காலம், நேரம் பாராமல் வங்கி மற்றும் கிராமங்களில் பணியாற்றி வருகிறார்கள்.

இந்த நிலையில், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் எரிபொருள் பிரச்சினை இருப்பதாக சுட்டிக்காட்டிய புத்தளம் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தங்களை மலினப்படுத்தும் வகையில் கண்டுகொள்ளாமல் இருப்பதும் வேதனையளிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

# யூரியா பசளை விநியோகிக்க ஏற்பாடு

(திறப்பனை தினகரன் அ.புரம் மேற்கு அநுராதபுரம் நிருபர்கள்)



விவசாயத்திற்கு தேவையான யூரியா பசளையை விநியோகிக்கும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் கூட்டம் ஒன்று (12) அநுராதபுர மாவட்ட செயலகத்தில் அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ஜனக ஜெயசுந்தர தலைமையில் இடம்பெற்றது.

சுமார் 60 நாட்களுக்குள் நெற்பயிர்களுக்கான யூரியா உரத்தை விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது, அநுராதபுர மாவட்டத்தில் சுமார் 68,000 ஹெக்டயர் நிலப்பரப்பில் இம்முறை பயிர்ச் செய்கை இடம் பெற்றுள்ளது. அதில் 49,224 ஹெக்டயர் காணிகளுக்கு யூரியா பசளை விநியோகிக்கப்பட உள்ளன. முன்னுரிமை அடிப்படையில் பசளையை வழங்குவதே இதன் கீழ் பொருத்தமானது என மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர இதன் போது தெரிவித்தார்.

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாய அபிவிருத்தி திணைக்களங்கள் ஊடாகவும் பசளை விநியோகிக்கப்படும் என அநுராதபுரம் விவசாய அபிவிருத்தி பிரதி ஆணையாளர் சமிந்த ஏக்கநாயக்க தெரிவித்தார்.

ஹெக்டயர் ஒன்றுக்கு 100 கிலோ யூரியா வீதம் வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இங்கு மாவட்ட மேலதிக செயலாளர் சந்தியா அபேசேகர, மாவட்ட விவசாய பணிப்பாளர் எச்.எல். தேனுவர, மாகாணங்களுக்கு இடையிலான பிரதி விவசாயப் பணிப்பாளர் டி.பி. மாலா ரம்யலதா, மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் பி.எஸ்.கே. சமரவீர, விவசாய அபிவிருத்தி உதவி ஆணையாளர் எச்.எம். குலதுங்க, மாவட்ட உதவி உர பணிப்பாளர்கள் ஆர். டபிள்யூ. திரு பந்துல குமார மற்றும் ஈ.டி. அஜித் குமார, மகாவலி "எச்" வலய குடியிருப்பு வர்த்தக முகாமையாளர் திரு.சுகத் விரசிங்க உள்ளிட்டோர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

# ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு அநுராதபுரத்தில்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான ஒரு நாள் ஊடக செயலமர்வு எதிர்வரும் (19) செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

சேஃப் பவுண்டேசன் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள குறித்த செயலமர்வு அநுராதபுரம் சீ பேங் உணவகத்தில் காலை 08.30 மணியில் இருந்து 04.30 வரை இடம்பெறவுள்ளது.

இச்செயலமர்வில் தெரிவு செய்யப்பட்டுள்ள ஊடகவியலாளர்கள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உடப்பிலிருந்து சிலாபம் செல்வதற்கு போக்குவரத்து சீர்கேடு

## மக்கள் பெரும் அசௌகரியம்

உடப்பு குறூப் நிருபர்

சாதாரணமான இக்கால கட்டத்தில் உடப்பிலிருந்து, சிலாபம் செல்வதற்கு உடப்பு மக்கள் பெருங்கஷ்டத்தை எதிர்நோக்கி வருகின்றனர். கடந்த சில வாரங்களாக இந்தப் பிரச்சினை இடம்பெற்று வருகின்றது. உடப்பு இந்து ஆலய பரிபாலன சபைக்குச் சொந்தமான பேருந்துகள் நீண்ட காலமாக சிலாபம் நகருக்குச் சென்று வந்தது குறிப்பிடத்தக்கதாகும். தற்போது எரிபொருள் பிரச்சினை காரணமாக உடப்பு பேருந்து நிறப்பாட்டப் பட்டுள்ளது. அதே நேரத்தில் புத்தளம் இருந்து உடப்புக்கான இலங்கை போக்குவரத்துக்குச் சொந்தமான பேருந்துகள் சேவையில் ஈடுபட்டு வருகின்றது குறிப்பிடத்தக்கதாகும். உடப்பு மக்கள் தமது அன்றாட தேவை காரணமாக, சிலாபம் செல்வதற்கு கஷ்டத்தை எதிர் நோக்கி வருகின்றனர். முக்கியமாக அவசர வைத்தியசாலைக்காக சிலாபம் செல்ல வேண்டியுள்ளது. இதனால் நோயாளிகள் பெருங்கஷ்டப்பட்டு வருகின்றனர். எனவே மக்களின் நலன் கருதி சிலாபத்திலிருந்து குறிப்பிட்ட நேரத்திலாவது உடப்புக்கு இலங்கை போக்குவரத்துக்குச் சொந்தமான பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# புத்தளம் நகர சபையினால் டெங்கு விழிப்புணர்வு







(புத்தளம் தினகரன் நிருபர்)

புத்தளம் ஒன்பதாம் வட்டாரத்தில் சில டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளதைத் தொடர்ந்து புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக்பின் விஷேட பணிப்பின்பேரில் புத்தளம் நகரசபையினால் புத்தளம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் இணைந்து டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் மேற்கொள்ளப் பட்டது. ஜயபிம, வில்லுவத்தை போன்ற குறிப்பிட்ட பகுதிகளில் இவ் வேலைத் திட்டம் முன்னெடுக்கப் பட்டது.

இதன்போது நுளம்புகள் பெருகும் இடங்கள் இனங்காணப்பட்டு அழிக்கப்பட்டதுடன் உரியவர்களுக்கு எச்சரிக்கப்பட்டு உரிய அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

# நடிகரும் இயக்குனருமான பிரதாப் போத்தன் காலமானார்

திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது

நடிகரும் இயக்குனருமான பிரதாப் போத்தன் சென்னையில் உள்ள வீட்டில் நேற்று வெள்ளிக்கிழமை காலை உடல் நலக்குறைவால் காலமானார். அவருக்கு வயது 70. இந்த நிலையில் அவரது மறைவிற்கு திரைப்பிரபலங்கள் பலரும் இரங்கல் தெரிவித்தார்கள்.

பிரதாப் போத்தன் தமிழில் மூடுபனி, வறுமையின் நிறம் சிவப்பு, நெஞ்சத்தை கிள்ளாதே, பன்னீர் புஷ்பங்கள், அழியாத கோலங்கள் உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார். மேலும் மார்த்தாண்டன், ஜீவா, வெற்றி விழா, சீவலப்பேரி பாண்டி உள்ளிட்ட படங்களை பிரதாப் போத்தன் இயக்கியுள்ளார். தமிழ், மலையாளம், தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளில் சுமார் 100க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.



தமிழில் முதல் முறையாக கமல்ஹாசன் நடித்த வெற்றி விழா திரைப்படத்தில் ஸ்டெடி கேமராவை பயன்படுத்தியவர் பிரதாப் போத்தன். திருவனந்தபுரத்தைச் சேர்ந்த பிரதாப் போத்தன் தான் இயக்கிய 'மீண்டும் ஒரு காதல் கதை' திரைப்படத்திற்காக தேசிய விருது பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நடிகர், இயக்குனர், எழுத்தாளர், திரைப்பட தயாரிப்பாளராகிய பன்முக தன்மையை கொண்ட பிரதாப் போத்தன் 1980ல் தனது திரைப்பட திரையுலக வாழ்க்கையை தொடங்கினார்.

சிறந்த நடிகருக்கான பிலிம் பேர் விருது, சிறந்த அறிமுக இயக்குனர் படத்திற்கான இந்திரா காந்தி விருது, கேரள மாநில திரைப்பட விருது உள்ளிட்ட பல விருதுகளை இவர் பெற்றுள்ளார்.

கதாநாயகனாக சில படங்களிலும் குணச்சித்திர வேடங்களிலும் நடித்து மக்கள் மனங்களை வென்றவர் நடிகர் பிரதாப் போத்தன்.

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் 1952ம் ஆண்டு ஆகஸ்ட் 13ம் திகதி பிறந்தார். நடிகர் பிரதாப் போத்தன் நடிகை ராதிகாவை 1985ம் ஆண்டு திருமணம் செய்து 1986ம் ஆண்டு விவாகரத்து செய்தார். அத்துடன் அமலா சத்யநாத் என்பவரை 1990 ஆம் ஆண்டு மணந்த இவர் 2012ம் ஆண்டு அவரை விவாகரத்து செய்தார். இவர்களுக்கு ஒரு மகள் உள்ளார்.






முந்தல் ஸ்ரீ திரௌபதியம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தில் புதன்கிழமை (13) தீமிதிப்பு இடம் பெற்றது. பூசகர் குழந்தைவேல் சுரேந்திரன் தமது முதற்பாதத்தை வைத்து தீமிதிக்க அதனைத் தொடர்ந்து பக்த அடியார்கள் ஒவ்வொருவராக தீமிதிப்பில் கலந்து கொண்டனர். (படம்: உடப்பு குறூப் நிருபர்)

# இலங்கை - பாகிஸ்தான் முதல் டெஸ்ட் போட்டி இன்று காலியில்

இலங்கை கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவிற்கு எதிரான மூவகைப் போட்டிகள் கொண்ட கிரிக்கெட் தொடர்களையும் நிறைவு செய்து புதிய பயணம் ஒன்றுக்கு தயாராகியிருக்கின்றது.இந்த டெஸ்ட் தொடரின் முதல் போட்டி இன்று சனிக்கிழமை (16) காலி நகரில் ஆரம்பமாகவிருக்கும் நிலையில், இந்த டெஸ்ட் தொடர் குறித்த முன்னோட்டத்தினைப் பார்ப்போம்.

அதன்படி இலங்கை கிரிக்கெட் அணி அடுத்ததாக தமது சொந்த மண்ணில் வைத்து பாகிஸ்தானுக்கு எதிராக ஐ.சி.சி. இன் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பிற்காக இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடுகின்றது.

பாகிஸ்தான், இலங்கை என இரு அணிகளையும் பொறுத்தவரை 1982ஆம் ஆண்டில் இருந்து டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று வருகின்றன. அன்றிலிருந்து இன்று வரை இரு அணிகளும் மொத்தமாக 55 டெஸ்ட் போட்டிகளில் ஆடியிருப்பதோடு, பாகிஸ்தான் அணி 20 டெஸ்ட் போட்டிகளிலும் இலங்கை அணி 16 டெஸ்ட் போட்டிகளிலும் வெற்றி பெற்றிருக்கின்றன. அதேநேரம் இரு அணிகளும் பங்குபற்றிய 19 போட்டிகள் சமநிலை அடைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இறுதியாக கடந்த 2015ஆம் ஆண்டு இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இங்கே நடைபெற்ற மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரினை 21 எனக் கைப்பற்றியிருந்தது. எனவே 2015ஆம் ஆண்டின் டெஸ்ட் தொடர் தோல்விக்கு பதிலடி கொடுக்க வேண்டிய நிலையில் இலங்கை காணப்படுகின்றது.

**இலங்கை**

கடந்த வாரமே டெஸ்ட் போட்டி ஒன்றினை வெற்றி கொண்ட இலங்கை கிரிக்கெட் அணி அதே உத்வேகம், அப்போட்டியில் கிடைத்த தன்னம்பிக்கை என நேர்மறையான விடயங்களோடு பாகிஸ்தான் தொடரினை ஆரம்பிக்கவிருக்கின்றது.

ஒட்டுமொத்தமாக இலங்கை குழாத்தினை நோக்கும் போது அவுஸ்திரேலிய தொடரில் ஆடிய அதே அணியே, பாகிஸ்தானையும் எதிர்கொள்கின்றது. எனினும் இந்த தொடரில் இலங்கை டெஸ்ட் அணியின் பிரதான சுழல் பந்துவீச்சாளர் லசித் எம்புல்தெனிய, சாமிக்க கருணாரட்ன, லக்ஷித மானசிங்க மற்றும் பிரவீன் ஜயவிக்ரம



ஆகியோருக்கு ஓய்வு வழங்கப்பட்டிருக்கின்றது.இலங்கை அணியினைப் பொறுத்தவரை இலங்கை அணியின் பிரதான துடுப்பாட்டவீரர்களாக இந்த தொடரில் திமுத் கருணாரட்ன, குசல் மெண்டிஸ் மற்றும் அஞ்சலோ மெத்திவ்ஸ் ஆகியோர் காணப்படுகின்றனர்.

இதில் திமுத் கருணாரட்ன அதிகம் எதிர்பார்க்கப்படும் வீரர்களில் ஒருவராக இருக்கின்றார். தற்போது டெஸ்ட் துடுப்பாட்டவீரர்கள் தரவரிசையில் 7ஆம் இடத்தில் காணப்படும் திமுத் கருணாரட்ன அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான முதல் போட்டியில் எதிர்பார்த்த ஆட்டத்தினை வெளிப்படுத்தாது போயினும், இரண்டாவது போட்டியில் இலங்கை அணியின் வெற்றியினை உறுதி செய்வதற்கு அவரின் துடுப்பாட்டமும் காரணமாக அமைந்திருந்தது.

மறுமுனையில் அஞ்சலோ மெத்திவ்ஸ் பாகிஸ்தானுக்கு எதிராக டெஸ்ட் போட்டிகளில் சுமார் 1400 ஓட்டங்கள் வரை குவித்திருப்பதோடு, 54.88 என்கிற துடுப்பாட்ட சராசரியினையும் கொண்டிருக்கின்றார்.

அத்துடன் குசல் மெண்டிஸின் துடுப்பாட்டமும் நல்ல நிலையில் காணப்படுகின்றது. இவர்கள் தவிர தன்னுடைய இறுதி டெஸ்டில் இரட்டைச் சதம் விளாசிய தினேஷ் சந்திமால், தனஞ்ய டி சில்வா மற்றும் பெதும் நிஸ்ஸங்க போன்றோரும் இலங்கை கிரிக்கெட் அணிக்கு மேலதிக துடுப்பாட்ட பலமாக காணப்படுகின்றனர்.

இலங்கை அணியின் பந்துவீச்சுத் துறையினை நோக்கும் போது சற்று அனுபவம் குறைந்த பந்துவீச்சாளர்களே, பாகிஸ்தான் டெஸ்ட் தொடரில் ஆடவிருக்கின்றனர். எனினும் நம்பிக்கைக்குரிய வேகப்பந்துவீச்சாளரான விஷ்வ பெர்னாண்டோ பங்களாதேஷ் தொடரின் பின்னர் அணிக்குள் மீண்டும் வந்திருப்பதோடு, சுழல்பந்துவீச்சாளர்களான பிரபாத் ஜயசூரிய, மகீஷ் தீக்ஷன போன்றோருக்கு தமது திறமையினை மீண்டும் வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

இலங்கை – பாகிஸ்தான் அணிகள் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி காலி மைதானத்தில் நடைபெறவிருப்பதனால் இலங்கை அணி அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான போட்டி போன்று ஒரு பிரதான வேகப்பந்துவீச்சாளர் ஒருவருடன் மாத்திரமே ஆடவுள்ளதால் சுழல்பந்துவீச்சாளர்கள் பலருக்கே வாய்ப்பு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**இலங்கை அணி**

திமுத் கருணாரத்ன (தலைவர்), பெதும் நிஸ்ஸங்க, ஓசத பெர்னாண்டோ அஞ்செலோ மெதிவ்ஸ், குசல் மெண்டிஸ், தனன்ஜய டி சில்வா, கமிந்து மெண்டிஸ், நிரோஷன் டிக்வெல்ல, தினேஷ் சந்திமால், ரமேஷ் மெண்டிஸ், மகீஷ் தீக்ஷன, கசுன் ராஜித, விஷ்வ பெர்னாண்டோ, அசித பெர்னாண்டோ, டில்ஷான் மதுசங்க, பிரபாத் ஜயசூரிய, துனித் வெல்லாலகே, ஜெப்ரி வெண்டர்சே

**பாகிஸ்தான் அணி**

கடைசியாக தமது சொந்த மண்ணில் வைத்து நடைபெற்ற டெஸ்ட் தொடரினை அவுஸ்திரேலியாவிற்கு எதிராக பறிகொடுத்த பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, தமது வடுக்களுக்கு மருந்து தேடிய வண்ணம் இலங்கை மண்ணை வந்தடைந்திருக்கின்றது.

பாகிஸ்தான் அணியினைப் பொறுத்தவரை 2015ஆம் ஆண்டில் அவர்கள் இலங்கையில் டெஸ்ட் தொடர் ஒன்றினை வெற்றிகொள்வதற்கு காரணமாக இருந்த யாசிர் சாஹ், சுமார் ஒரு வருட ஓய்விற்குப் பின்னர் விளையாடவுள்ள முதல் சர்வதேச தொடராக இலங்கை – பாகிஸ்தான் அணிகள் இடையிலான டெஸ்ட் தொடர் அமையவுள்ளது. யாசிர் சாஹ் கடைசியாக மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் ஒன்றில் விளையாடுவதற்காக இலங்கை வந்திருந்த போது இலங்கை மண்ணில் 24 விக்கெட்டுக்களைச் சாய்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது. எனவே யாசிர் சாஹ்வின் பந்துவீச்சினை பாகிஸ்தான் பெரிதும் இந்த டெஸ்ட் தொடரில் நம்பியிருக்கின்றது.

பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்டத்தினை நோக்கும் போது பாபர் அசாம் அணியின் நம்பிக்கைகுரிய துடுப்பாட்டவீரராக காணப்படுகின்றார். அத்துடன் டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்கள் வரிசையில் நான்காம் இடத்தில் காணப்படும் அவர், இரு அணிகளின் வீரர்களை நோக்கும் போது டெஸ்ட் துடுப்பாட்டவீரர்கள் வரிசையில் சிறந்த நிலையினைக் கொண்ட வீரராகவும் காணப்படுகின்றார்.பாபர் அசாம் தவிர பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்டத்துறையானது அனுபவ வீரர் அஷார் அலி, மொஹமட் ரிஸ்வான், இமாம்உல்ஹக் மற்றும் பவாட் அலாம் போன்ற வீரர்கள் மூலம் பலம் பெறுகின்றது.

அணியின் பந்துவீச்சுத்துறையினை நோக்கும் போது யாசிர் சாஹ்வுடன் சேர்த்து சஹீன் அப்ரிடி அணியின் பிரதான வேகப் பந்துவீச்சாளராக காணப்படுகின்றார். இவர்களுடன் நஸீம் சாஹ், ஹசன் அலி ஆகியோர் பாகிஸ்தானின் பந்துவீச்சுக்கு மேலதிக உறுதியாக காணப்படுகின்றனர்.

**பாகிஸ்தான் அணி**

பாபர் அசாம் (அணித்தலைவர்), மொஹமட் ரிஸ்வான் (பிரதி அணித்தலைவர்), அப்துல்லா சபீக், அஷார் அலி, பஹீம் அஷ்ரப், பவாட் அலாம், ஹரிஸ் ரவுப், ஹசன் அலி, இமாம்உல் ஹக், மொஹமட் நவாஸ், நஸீம் சாஹ், நௌமான் அலி, சல்மான் அலி அகா, சர்பராஸ் அஹ்மட், சவூத் சகீல், சஹீன் அப்ரிடி, ஷான் மசூத், யாசிர் சாஹ்

# சிரேஷ்ட வீரர்கள் அணியின் பொறுப்பை ஏற்றுள்ளார்கள்

## உதவிப் பயிற்றுவிப்பாளர் நவீட் நவாஸ்

இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய தலைமைப் பயிற்றுவிப்பாளர் கிறிஸ் சில்வர்வுட்டின் பயிற்றுவிப்பின் கீழ் சிரேஷ்ட வீரர்கள் பொறுப்புடன் விளையாடுவது மகிழ்ச்சியளிப்பதாக இலங்கை அணியின் உதவிப் பயிற்றுவிப்பாளர் நவீட் நவாஸ் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில், தினேஷ் சந்திமால் 118 ஓட்டங்களைப் பெற்று ஓய்வறை திரும்பியபோது, தனது பொறுப்பு இன்னும் முடிவடையவில்லை என பயிற்றுவிப்பாளர் சந்திமாலிடம் தெரிவித்ததாகவும், அவர் சொன்ன வார்த்தையிலிருந்து புத்துணர்ச்சி பெற்ற அவர், 206 ஓட்டங்களைக் குவித்து இலங்கை அணியின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தார் என உதவிப் பயிற்றுவிப்பாளர் மேலும் கூறினார்.



இலங்கை அணியின் உதவிப் பயிற்றுவிப்பாளர் நவீட் நவாஸ் Cricbuzz இணையத்தளத்துக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

‘தினேஷ் சந்திமால் சதத்தைப் பூர்த்தி செய்த நாள் ஆட்ட நேரம் முடிந்தவுடன், உங்களது டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையில் அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையை இந்தப் போட்டியில் பார்க்க விரும்புகிறேன் என நான் சொன்னேன். டெஸ்ட் கிரிக்கெட்டில் 165 ஓட்டங்கள் தான் அவருடைய முந்தைய அதிகபட்ச ஓட்டங்களாக காணப்பட்டது. எனவே, இந்தப் போட்டியில் அதை அவர் முறியடிக்க வேண்டும் என்பதை நாங்கள் இலக்காகக் கொண்டோம். அவர் 165 ஓட்டங்களைக் கடந்தபோது, அவரை மீண்டும் யாராலும் தடுக்க முடியவில்லை.

கிறிஸ் சில்வர்வுட்டின் தலைமையிலான இலங்கை அணியின் பயிற்சியாளர்கள் குழாம் அணியில் உள்ள சிரேஷ்ட வீரர்களுக்கு அதிக வாய்ப்பு வழங்குகிறார்கள் என்று அவர் மேலும் கூறினார்.

‘நீங்கள் தான் அணிக்கு சொந்தக்காரர்கள் என்று நாங்கள் அவர்களிடம் சொன்னோம். சிரேஷ்ட வீரர்கள் இலங்கை கிரிக்கெட்டுக்கு அளப்பெரிய சேவை செய்திருப்பதை நீங்கள் அறிவீர்கள். அவர்கள் அணியின் உரிமையை எடுத்துக் கொண்டு, இது எனது அணி, நான் இந்த அணிக்காக விளையாட வேண்டும் என்று நினைக்கிறார்கள்’ என்று குறிப்பிட்டார்.

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டிக்கு முன்னதாக, இலங்கை டெஸ்ட் அணித்தலைவர் திமுத் கருணாரத்னவும் Cricbuzz இணையத்தளத்துக்கு வழங்கிய நேர்காணலில், சிரேஷ்ட வீரர்கள் மீது தனக்கு நம்பிக்கை இருப்பதாகக் கூறியிருந்தார்.

புதிய தலைமைப் பயிற்சியாளர் சில்வர்வுட் அணியில் உள்ள அனுபவம் வாய்ந்த வீரர்களுடன் நல்ல நம்பிக்கையை வளர்த்து வருகிறார் என்று அவர் கூறினார்.

இலங்கையில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இலங்கை கிரிக்கெட் வீரர்கள் சிறப்பாக செயற்பட்டு வெற்றிக்காக விளையாடுவார்கள் என்றும் உதவிப் பயிற்சியாளர் நவீட் நவாஸ் தெரிவித்துள்ளார். ‘இலங்கையின் தற்போதைய நிலைமை அனைவருக்கும் தெரியும். நாங்கள் அணியாக சிறப்பாகச் செயற்படுவது பற்றியும், மக்கள் முகத்தில் புன்னகையைப் பார்ப்பது பற்றியும் பேசினோம்.’ என தெரிவித்தார்.

இலங்கை அணியின் அடுத்த சவால் குறித்து நவீட் நவாஸ் கருத்து தெரிவிக்கையில், ‘பாகிஸ்தான் வலுவான அணி. நாங்கள் அந்த அணியுடன் விளையாடுவதை மிகப் பெரிய சவாலாக எடுத்துக்கொள்கிறோம். ஏனெனில் இந்தப் போட்டியும் ஐசிசி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியாகும்’ என்று அவர் கூறினார்.

# சாய்ந்தமருது ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் கழக வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய சீருடை அறிமுக நிகழ்வும்

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

சாய்ந்தமருது ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் மற்றும் புதிய சீருடை அறிமுக நிகழ்வு புதன்கிழமை சாய்ந்தமருது இளைஞர் சேவைகள் மன்ற பயிற்சி நிலையத்தில் விளையாட்டு பாட ஆசிரியரும், கழக அமைப்பாளருமான எம்.எச்.எம். முஸ்பீக் மற்றும் கழக முகாமையாளர் அப்ரத் அலி ஆகியோரின் நெறிப்படுத்தலில் கழக செயலாளர் லாபீர் முஹம்மட் ஷிப்னாஸ் தலைமையில் நடைபெற்றது.



இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கல்முனை மாநகர பிரதி முதல்வரும், ரஹ்மத் பவுண்டேஷன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூர் கலந்து கொண்டு கழக சீருடையை அறிமுகம் செய்து வைத்தவுடன் கழகத்திற்கான விளையாட்டு உபகரணங்களையும், கழக மேம்பாட்டுக்கான உதவித்தொகையையும் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் இலங்கை உயர் தொழிநுட்பவியல் கல்வி நிறுவக சம்மாந்துறை நிலையத்தின் விரிவுரையாளர் எம்.பி.நௌஸாத், சாய்ந்தமருது கிரிக்கெட் சம்மேளன செயலாளரும், விளையாட்டு உத்தியோகத்தருமான ஏ.எம்.ரிஷாட் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தியதுடன் 19 வயதிற்குட்பட்ட அம்பாறை மாவட்ட அணிக்கு தேர்வான வீரர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாக தெரிவும் இடம்பெற்றது.

மேலும் நிகழ்வின் விசேட அதிதிகளாக நிகழ்வுக்கு அனுசரணை வழங்கியிருந்த பிஸ்மில்லாஹ் ஹோட்டல் சார்பிலான பிரதிநிதிகள், ரஹ்மத் பவுண்டேஷன் நிர்வாக இயக்குனர் அகில் மன்ஸூர், சாய்ந்தமருது இளைஞர் சேவைகள் பயிற்சி நிலைய பொறுப்பதிகாரியும் இளைஞர் சேவை அதிகாரியுமான எம்.டீ.எம். ஹாரூன், டொப் குயின் நிறுவன உரிமையாளர் எம். மர்லியாஸ், சாய்ந்தமருது ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் கழக தலைவர் எம். சுபைர், ரெட் மெக்ஸ் உரிமையாளர் ஏ.என்.எம். ஜலூத், கடாகோ ஏ.எம்.வஸீர், சன்பிளவர் விளையாட்டுக் கழக செயலாளர் அஸ்வர் அப்துல் ஸலாம், மியண்டாட் விளையாட்டுக்கழக அணித் தலைவர் ஏ.எச்.எம். முர்ஸித் மற்றும் ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் விளையாட்டுக் கழக நிர்வாகத்தினர்கள் மற்றும் அங்கத்தவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# கோலாகலமாக ஆரம்பமான மியண்டாட் கழக எப்.எஸ்.கே.மியன்டாட் பிரிமியர் லீக் சீசன் -2

**சாய்ந்தமருது விசேட நிருபர்**




சாய்ந்தமருது மியண்டாட் விளையாட்டுக் கழகத்தினால் வருடாவருடம் நடாத்தப்படுகின்ற எப்.எஸ்.கே.மியன்டாட் பிரிமியர் லீக் சீசன் 2 (FSK MPL SeasonII)கடினபந்து கிரிக்கெட் சுற்று போட்டி மிக கோலாகலமாக சாய்ந்தமருது பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று (13)புதன்கிழமை இடம்பெற்றது

ஆரம்பமாக வீரர்களின் அறிமுகத்துடன் கிரிக்கெட் போட்டிகள் இடம்பெற்றது.

மாளிகா யூனைடட் மற்றும் வோலி லயன்ஸ் அணி சாந்தம் சலன்ஜேஸ் மற்றும் மருதூர் வோரியஸ் அணி மருதூர் வோரியஸ் மற்றும் மாளிகா யூனைடட் ஆகியன அணிகளுக்கிடையே ஆரம்ப நாளில் போட்டிகள் இடம்பெற்றது

சாய்ந்தமருது மியன்டாட் விளையாட்டு கழகத்தின் லீக் சுற்றுத்தொடர் தலைவர் ஏ.ஏ.ஹலீம்,கழகத்தின் தலைவர் ஏ.பாயிஸ், தவிசாளர் எம். ஜே.எம். காலித், கழகத்தின் உரிமையாளர்கள் நிர்வாக உறுப்பினர்கள் என பலரும் இதன் போது கலந்து கொண்டனர்.

அம்பாரை மாவட்டத்தில் 30 வருடத்துக்கு மேல் வரலாற்றை கொண்ட முன்னணி கழகமான சாய்ந்தமருது மியான்டாட் கழகத்தின் சுமார்80 கடின பந்துவிளையாட்டு வீரர்கள் குறித்த போட்டியில் மொத்தமாக விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது .

சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டி இன்று (15)ஆம் திகதி அன்று எப்.எஸ்.கே. மியண்டாட் பிரீமியர் லீக் சீசன் 2" நிறைவடையவுள்ளது.

# மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சூரியா விளையாட்டுக் கழகம் சம்பியன்

**கல்லாறு தினகரன் நிருபர்**

பெரியகல்லாறு பொதுவிளையாட்டு மைதானத்தில் கடந்த மாதம் ஞாயிறு(26) மாலை பெரியகல்லாறு ஒலிம்பியா விளையாட்டுக் கழகம் உள்ளூர் கழகங்களிடையே தனது 49வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியில் சூரியா விளையாட்டுக் கழகமும், ஒலிம்பியா விளையாட்டுக் கழகமும் மோதின. சூரியா விளையாட்டுக்கழகம் சிறப்பாக விளையாடி 94 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஒலிம்பியா விளையாட்டுக் கழகம் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 42 ஆட்டங்களை மட்டும் பெற்று தோல்வியைத் தழுவியது.

ஒலிம்பியா தலைவர் இரா.கோபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கிழக்கு மாகாண நீர்ர்ப்பாசன திணைக்களத்தின் மட்டக்களப்பு பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் கோ.சுஜிதரன், பிரதம அதிதியாகவும் விசேட அதிதிகளாக பிரதேச சபை உறுப்பினர் ச.கணேசநாதன், ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலய கணக்குப்பிள்ளை சோ.சுவேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தலைவர் தனது ஆரம்ப உரையில் உள்ளூர் கழகங்கங்களுக்கிடையே ஒற்றுமையையும் திறமையையும் வளர்த்துக் கொள்ளும் நோக்குடன் எமது 40வது ஆண்டு நிறைவை முன்னிட்டு இப்போட்டியானது வெற்றிகரமாக அனுசரணையாளர்களின் பங்களிப்புகளுடன் மேற்கொண்டதாகத் தெரிவித்தார். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது என்பதைக் கருத்திற் கொண்டு போட்டியாளர்கள் ஒழுக்க நெறியைப் பின்பற்றுவதே முக்கியமாகும் என்று சுட்டிக் காட்டினார்.

பிரதம அதிதி தனதுரையில் கல்விக்கு தடம் பதித்த எமது கிராமத்து இளைஞர்கள் விளையாட்டிலும் பல சாதனைகளைப் புரிந்து தடம் பதித்து வருவது பாராட்டுக்குரியது. அதற்கு வலுச்சேர்ப்பதாக இத்தகைய போட்டிகள் ஒழுங்கு செய்யப்படுவது வரவேற்கத்தக்க விடயமாகும்.

சூரியா விளையாட்டுக் கழகத்தின் துடுப்பாட்டம் சிறப்பாக இருந்தது. ஒலிம்பியா அணியிலும் திறமையான வீரர்கள் இருந்தும் சோபிக்காமல் இலக்கை அடையாமல் விட்டுவிட்டார்கள். விளையாட்டில் வெற்றி தோல்வி என்பது சகஜம். இரு அணியினருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன் என்றார். இறுதியில், ஆட்டநாயகன், தொடர் ஆட்ட நாயகன் விருதுகள் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து றண்ணஸ் அப் கிண்ணத்தை ஒலிம்பியா விளையாட்டுக் கழகத்தின் அணித் தலைவர் அனோஜ்க்கு பிரதேச சபை உறுப்பினர் கணேசநாதன் மற்றும் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலய செயலாளர் சோ.சுவேந்திரன் ஆகியோர் இணைந்து வழங்கி வைத்தனர்.

சவால் வெற்றிக் கிண்ணத்தை அபார வெற்றி பெற்ற சூரியா விளையாட்டுக் கழகத்தின் அணி தலைவர் ஜினோவிற்கு பிரதம அதிதி கோ.சுஜிதரன், விசேட அதிதி ச.கணேசநாதன் ஆகியோருடன் தலைவர் இரா.கோபாலசிங்கமும் இணைந்து வழங்கி வைத்தனர்.

